Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-02 | 18-08-2005 | வியாழக்கிழமை | ஓசை-182



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12425)

# போராளியை இராணுவம் கடத்தியது; யாழ். குடாநாட்டில் பதற்றநிலை!

## யாழ். பொலிஸ் நிலையத்திற்கு இராணுவப் பாதுகாப்பு போராளி கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

**யாழ். கொக்குவில் கலட்டிச்சந்தியடியில் போராளி ஒருவரின் வீட்டைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும்,பொலிசாரும் நோயாளியான போராளியைக் கைது செய்து யாழ். பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் பதற்றமானதொரு சூழ்நிலை நிலவுவதாகவும், யாழ். பொலிஸ் நிலையத்திற்கு இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதோடு, வீதிகளிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இதேவேளை கைது செய்யப்பட்ட போராளி உலங்கு வானூர்தி மூலம் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு சிறிலங்கா குற்றப் புலனாய்வுப்பணியகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் சுகவீனமுற்ற நிலையில் வீட்டில் தங்கியிருந்த கோபி எனும் போராளியை கைது செய்யச் சென்ற பொலிசாரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே உயர்மட்டக் குழு அரசியல் ஆலோசகருடன் பேச்சு

சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் காரணமாக நோர்வே அனுசரணையாளர்கள் நேற்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை லண்டனில் அவரது இல்லத்தில் சந்திக்கவிருந்ததாக இலங்கை நோர்வே தூதரக அதிகாரி ரொம் கனப்ஸ்கொக் தெரிவித்தார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்பதாகத் தெரிவித்தார். எனினும் இச்சந்திப்புத் தொடர்பான விபரங்களை வெளியிட அவ்அதிகாரி மறுத்துவிட்டார். அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து இடம்பெறும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

## அவசரகாலச் சட்ட விவாதத்திற்கு கட்சித்தலைவர்கள் ஒப்புதல்!

### -த.தே.கூட்டமைப்பு பங்கேற்கவில்லை

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் தொடர்பான ஒருநாள் விவாதம் ஒன்றை இன்று பாராளுமன்றத்தில் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். இந்த விவாதம் மதிய போசன இடைவேளையின்றி நடத்தப்படவேண்டும் என கட்சித் தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பை தவிர்ந்த ஏனைய கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதை அடுத்து நாட்டில் பிறப்பிக்கப்பட்ட அவசர கால நிலையை அங்கீகரிப்பதற்காக இன்றைய தினம் சனாதிபதி பாராளுமன்றத்தை கூட்டியுள்ளமை தெரிந்ததே.

அரசியலமைப்பில் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட போராளி விடுவிக்கப்படாமை கடும் விளைவுகளை ஏற்படுத்தும்!

### கண்காணிப்புக்குழுவிற்கு புலிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேண்டுமென்றே திட்டமிட்ட வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை வலுவற்றதாக்கும் உள்நோக்குடனேயே சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள போராளி கோபியை கடத்திய சம்பவம் அமைந்துள்ளது. உடனடியாக போராளி கோபி விடுவிக்கப்படாதுவிடின் கடுமையான நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலைக்கு புலிகள் தள்ளப்படுவார்கள் - என யாழ். மாவட்ட அரசியல்துறை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் நேற்று தெரிவித்துள்ளது.

அரசியல்துறை நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று (17.08.2005) காலை 8.30 மணியளவில் ஒரு கையை ஏற்கனவே இழந்து சுகவீனமுற்றிருந்த எமது இயக்க உறுப்பினராகிய கோபி

(16ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் இரண்டு சிறிலங்காப் பொலிசார் காயம்!

### தாக்கப்பட்டதாக படைத்தரப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கலட்டிப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரு பொலிசார் படுகாயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு விமானம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர்.

குறிப்பிட்ட இடத்திற்கு காலையில் அதிக எண்ணிக்கையான

(16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் மீது மேலெழுந்தவாரியான பிரதமரின் குற்றச்சாட்டு கண்டிக்கத்தக்கது

### - தமிழ்தேசியக்கூட்டமைப்பு கண்டனம்

நாட்டின் பொறுப்புவாய்ந்த பதவியிலிருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேலெழுந்த வாரியாக விடுதலைப்புலிகள் மீது குற்றஞ்சாட்டி இனவாதமாக பேசுவது கவலைக்குரியதும், கண்டனத்திற்குரியதும் ஆகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கதிர்காமரின் இறுதிச் சடங்கிலும், கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக நேரடியாகவே புலிகளைக்குற்றம் சாட்டியதுடன் விடுதலைப்புலிகளைப்பயங்கரவாதிகள் எனக் கூறியமை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிச்சடங்கில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பைக்கோரியிருக்கின்றார். ஆனால் புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான ஆதரவை பிரதமர் கோர

(16ஆம் பக்கம் பார்க்க)

## குருமன்காட்டில் நேற்றிரவு இளைஞர் சுட்டுக்கொலை!

(செட்டிகுளம்)

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் நேற்றிரவு இனந்தெரியாத நபர்களினால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 28 வயது மதிக்கத்தக்க ரெலோ மதி என்று அடையாளம் காணப்பட்டுள்ளபோதும் அவரின் முழுமையான பெயர் உடனடியாக பொலிசாருக்கு கிடைக்கவில்லை வவுனியா நகரில் இருந்து மேற்குத் திசையில்1.5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள குருமன் காட்டுக்காளி கோவில் அருகாமையிலுள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது எழுந்தமானமாக குற்றம் சுமத்துவது குற்றவாளிகள் தப்பிச்செல்லவே வழிவகுக்கும்!

### ரொய்ட்டருக்கு வழங்கிய பேட்டியில் சு.ப.தமிழ்ச்செல்வன்

(ரொய்ட்டர்)

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு விடுதலைப்புலிகள் மீது எழுந்தமானத்தில் குற்றஞ்சாட்டிவிட்டு உண்மையான குற்றவாளிகள் தப்பிச்செல்வதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் செயலில் சிறிலங்கா அரசு இறங்கியுள்ளது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரொய்ட்டருக்கு அவர் வழங்கிய செவ்வியின் முழு விபரமும் வருமாறு:-

***கேள்வி:- தெற்கிலே ஒரு இறுக்கமான சூழல் ஏற்பட்டுள்ளது. கதிர்காமருடைய மரணத்தின் பின்னர் தங்களுடைய மறுப்பினையும் பார்த்திருக்கின்றோம். அந்த வகையில் யார் இந்தக் கொலையை செய்திருக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?***

பதில்:- எம்மைப் பொறுத்த வரையில் தெற்கிலே ஏற்பட்டிருக்கின்ற குழப்ப நிலைமைகளின் ஒரு உச்சக்கட்டமாக இக்கொலை இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே அரச தரப்புக்களில் உள்ள முரண்பாடுகள், அதிகாரப் போட்டிகள், சனாதிபதித் தேர்தல் எதிர்கொள்ளப்படுகின்ற சூழலில் எழுந்துள்ள பிரச்சினைகள், மிக முக்கியமாக ஆயுதப் படைகளுக்குள் ஊருடுவியுள்ள ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றிய சந்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

M.S Office, Desktop Publishing (D.T.P), Hardware 20.08.2005 சனிக்கிழமை K.S.K கணினி நிலையம் புதுக்குடியிருப்பில ஆரம்பம். பிரிவு I மாலை 2.00 மணிக்கு, பிரிவு II இரவு 7.00 மணிக்கு. அனுமதிக்கட்டணங்கள் இலவசம். பயிற்சி முடிவில் அரச, சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். நிர்வாகம். (6602)

## இன்று தேர்த்திருவிழா

கிளிநொச்சி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று சிறப்புற நடைபெறவுள்ளது.கிளிநொச்சி நகர் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த பத்தாம் திகதி கொடியேற்றலுடன் ஆரம்பமாகி சிறப்புற நடைபெற்று இன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. இன்று காலை எட்டு மணிக்கு தேர்ப்பவனி நடைபெறவுள்ளது.

## விண்ணப்பங்கள் கோரல்

சூழலியல் நல்லாட்சி ஆணையகம் பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சுற்றுச்சூழல் இணைப்பாளர்
2. செய்தித் தொகுப்பாளர்

கல்வித்தகைமை:– க. பொ. த. உயர்தரத்தில் உயிரியலில் 3 பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பிறதகைமைகள்– சூழலியல் சார்பான துறையில் அனுபவம், ஆற்றல் விரும்பத்தக்கது.

வயதெல்லை– 20–28

விண்ணப்ப முடிவுத் திகதி:– 20. 08. 2005

மேற்படி விண்ணப்பதாரி தபால் உறையின் இடது மேல் மூலையில் தமது பணிநிலையை குறிப்பிட்டு மனிதவள மேம்பாட்டுப்பகுதி என கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தபால் அனுப்ப வேண்டிய முகவரி:-
சூழல் நல்லாட்சி ஆணையகம்,
திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகம்,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

தகவல்:–
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
சூழல் நல்லாட்சி ஆணையகம்,
தமிழீழம்.

(சி.12563)

## சாவு அறிவித்தல்



### சீதாலட்சுமி சிவசாமி

புதுகுடியிருப்பு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சீதாலட்சுமி சிவசாமி அவர்கள் கடந்த 15.08.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், சிவசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கோயிலார், பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், சரவணபவன் (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் முல்லைத்தீவு), சந்தானலட்சுமி, குணநாயகி, சண்முக வடிவேல், சந்திராதேவி, நடேசபிள்ளை (பிள்ளையார் பிடவை மாளிகை), மல்லிகாதேவி, கணேசபூபன் (லண்டன்), தியாகராசா (அம்மன் வணிக மாளிகை), தர்மலிங்கம் (லண்டன்), பாலச்சந்திரன் (கந்தையா விற்பனைக்களஞ்சியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,கமலாம்பிகை, பாலாம்பிகை, செல்வநாயகம் (அ... ர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), புஸ்பராணி, தங்க..., கலைச்செல்வி (பிரான்ஸ்), சகுந்தலா தேவி, பரமநாயகம் (லண்டன்), இராசநாயகம், தனலட்சுமி, சியாமளா, அருமைநாயகம், தேவநாயகி ஆகியோரின் பாசமிகு தாயரும், தங்கராசா, காலஞ்சென்ற செல்வராசா, கோமளா, சிவராசா, அமிர்தலிங்கம், சிவகுமார் (பிரான்ஸ்), புஸ்பராசா (தமிழீழ போக்குவரவுக் கழகம்), சுபோதினி (லண்டன்), சுரேஸ்வரன், சந்திரகௌரீசன் (கண்டா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18.08.2005 வியாழக்கிழமை (இன்று) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் நான்கு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

தகவல்:-
மகன் செல்வநாயகம்
(ஆசிரியர்)

(சி.12609)

## தெய்வம் வாணிப மாளிகை தற்காலிக இடமாற்றம்

புதுக்குடியிருப்பு சந்தியில் இயங்கி வந்த தெய்வம் வாணிபமாளிகை தற்காலிகமாக புதுக்குடியிருப்பு ஓட்டு சுட்டான் வீதியில், புதுக்குடியிருப்பு பிரதான பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் 19.08.2005 வெள்ளிக்கிழமை சுபநேரம் 12 மணிக்கு வியாபாரத்தை ஆரம்பிக்கவுள் ளோம் என்பதை எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

"வாடிக்கையாளர்களின் ஆதரவுக்கு நன்றி"

தெய்வம் வாணிப மாளிகை,
புதுக்குடியிருப்பு.

(சி.12610)

## முக்கிய அறிவித்தல்

### கல்லாறு பிரதேச மணல் சேகரிப்பு மையம்

(01) கல்லாறு பிரதேசத்தை அண்மித்துள்ள பகுதிகளில் கட்டடத் தேவைகளுக்காக மணல் தேவைப்படுவோர், அல்லது அவற்றை விநியோகிக்கும் வாகன உரிமையாளர்கள் இன்று முதல் கல்லாறு முகாமுக்கண்மையில் பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் மணல் சேகரிப்பு மையத்திலிருந்து மட்டும் மணலைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

(02) கல்லாறு பிரதேசத்தில் பற்றுச்சீட்டு இன்றி வாகனங்களில் மணல் ஏற்றிச்செல்லப்பட்டால் அல்லது வளவுகளில் குவித்து வைக்கப்பட்டால் தண்டப்பணமாக ரூபா 5000/= அறவிடப்படுவதுடன், ஏற்றிய அல்லது குவித்துவைத்துள்ள மணலும் பிரதேச சபையின் உடைமையாக்கப்படும். அத்துடன் ஏற்றிய வாகனமும் தடுத்து வைக்கப்படும்.

பொன். நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12565)

## இயலவிற்பனை

காலம் - 2005.08.21

இடம்:- புதுக்குடியிருப்பு (புதுக்குடியிருப்பு சந்தி அருகாமை)

பொருள் விரிப்பு:-
- இலத்திரனியல்
- சுருநுளிகள்
- அழகுசாதனம்
- புடைவை வகை

மேலதிக விபரம் நாளை எதிர்பாருங்கள்

(சி.12564)

## அழைப்பிதழ்




இடம்:- மத்திய மருந்தகம், செம்மலை,அளம்பில்.
திகதி:- 18.08.2005 வியாழக்கிழமை
நேரம்:- காலை.11.30 மணி

அன்புடன் அழைக்கின்றோம்.

விழாக்குழுத்தலைவர்
வைத்தியகலாநிதி.து.வி.ஜெயக்குலராஜா
மாகண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்,
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்
பணிமனை, முல்லைத்தீவு.

பிரதம விருந்தினர்
திருமதி.இமெல்டா சுகுமார்
அரச அதிபர், முல்லைத்தீவு.

கௌரவ விருந்தினர்
திரு.ஏ.சோதிநாதன்
உதவி அரசாங்க அதிபர்
கரைத்துறைப்பற்று

வைத்திய கலாநிதி.ஜி. தர்மேந்திரா
மாவட்ட வைத்திய அதிகாரி,
முல்லைத்தீவு.

திரு.சி.இரகுநாதபிள்ளை
மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர்,
நிகொட், முல்லைத்தீவு.

வைத்தியகலாநிதி .க.சுதர்சன்
தாய், சேய் நல வைத்திய அதிகாரி,
பிராந்தியதொற்று நோயியலாளர்,
முல்லைத்தீவு.

சிறப்பு விருந்தினர்
திரு.ச.கனகரட்ணம்
பாராளுமன்ற உறுப்பினர்.

(6549)

# வெனிசுலாவில் விமான விபத்து

# 160 பேர் உடல் சிதறிப் பலி



[illegible]மானத்தின் சிதைந்த பகுதிகளையும், மீட்[illegible]யில் ஈடுபட்டுள்ள மீட்புப் பணியாளர்களை[illegible] காணலாம்



(கரகாஸ்)

**தென்னமெரிக்க நாடான வெனிசுலாவில் நேற்று முன்தினம் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில் விமானப்பணியாளர்கள் உட்பட அதில் பயணம் செய்த 160 பேரும் உடல் சிதறிப்பலியாகினர்.**

விமானம் பனாமாவில் இருந்து மார்ட்டினிக் என்ற இடத்துக்கு சென்று கொண்டிருந்த போதே விபத்துக்குள்ளானது. அது 152 சுற்றுலா பயணிகளுக்காக அமர்த்தப்பட்டதாகவும் அதில் எட்டு விமான ஊழியர்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் மதியம் 12.30 மணியளவில் பறந்து சென்று கொண்டிருந்தபோது அதன் இரண்டு இயந்திரங்களிலும் கோளாறு ஏற்பட்டது. அதுபற்றி விமானி கரகாஸ் விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார். ஆனால் அடுத்த பத்து நிமிடங்களில் அந்த விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அந்த விமானம் வெனிசுலாவின் கிழக்கு எல்லையிலுள்ள சுலியா மாகாணத்தின் மேச்சிக்ஸ் என்ற இடத்தில் இரண்டு பண்ணைகளுக்கு இடையே தரையில் மோதி நொருங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த விமானம் நொருங்கிக் கிடப்பதை உலங்குவானூர்தி மற்றும் விமானங்களில் சென்று பார்த்தவர்கள் விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்தவர்களில் யாரும் உயிர் பிழைத்து இருக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் இருந்த விமான ஊழியர்கள் அனைவரும் கொலம்பியாவைச் சேர்ந்தவர்கள் என்று கொலம்பிய விமான நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார். ஆனால் அதில் இருந்த 152 சுற்றுலா பயணிகளும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது உடனடியாகத் தெரியாதபோதிலும் பிரான்ஸ் உல்லாசப் பயணிகளே அதிகம் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



விபத்துக்குள்ளான விமானம்

அந்த விமானம் மேற்கு கரிபியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்ததாகும். இறந்தவர்களின் உடல்களை மீட்க மீட்புப் பணியாளர்கள் விரைந்துள்ளனர். இது இவ்வாறிருக்க, கடந்த ஞாயிறன்று சைப்பிரஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 121 பயணிகள் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## பாக்தாத்தில் தொடர்குண்டுவெடிப்பு

## 35 பேர் பலி; 80 பேர் படுகாயம்



(பாக்தாத்)

பாக்தாத்தின் அல்நக்தா பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தில் நேற்றுக்காலை கார்க்குண்டு வெடித்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில் 35 இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 80 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

குண்டு வெடித்ததில் பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துகள் தீப்பிடித்து எரிந்தன. அங்குள்ள கடைகளும் தீயில் எரிந்து சாம்பரானது.

குண்டு வெடிப்பில் பலியானவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். பலியானவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர்.

## ஒரேநேரத்தில் பல குண்டுவெடிப்பு

## பங்களாதேஷில் 100 பேர் காயம்



(டாக்கா)

பங்களாதேஷில் டாக்கா உட்பட 49 மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்கள், அச்சகம், கேளிக்கை விடுதி, நீதிமன்றம் ஆகிய பகுதிகளில் ஒரே நேரத்தில் பல குண்டுகள் வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டு 300 பேர் காயம் அடைந்துள்ளனர். குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் தடைசெய்யப்பட்ட ஜமாதுல் முஜாகிதீன் என்ற அமைப்பின் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டுள்ளன. குண்டு வெடிப்புத் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## லண்டன் சுரங்க ரயிலில் தீ விபத்து

## இரண்டு பேர் மூச்சுத்திணறிப் பலி

(லண்டன்)

லண்டனில் கடந்த யூலை மாதம் ஏழாம் திகதியும் 21ஆம் திகதியும் சுரங்க ரயில்களில் தொடர் குண்டுகள் வெடித்தன. இதில் 56 பேர் பலியானார்கள். மீண்டும் தீவிரவாதிகள் இதே போல் வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தலாம் என்ற பீதி லண்டனில் நிலவி வந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சுரங்கப் பாதை ரயிலில் திடீரென்று தீப் பிடித்துக்கொண்டது. லண்டன் நகரையும் ஆங்கிலோ பிரேஞ்சு பகுதியையும் இணைக்கும் வகையில் கடலுக்கு அடியில் சுரங்க ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

109 கிலோமீற்றர் தூரமுள்ளது இந்தச்சுரங்க ரயில் பாதை தண்டவாளங்கள் போடப்பட்டு, மின்சார விளக்குகளும் போடப்பட்டு விட்டன. 2007ஆம் ஆண்டில்தான் இந்த பாதையில் பயணிகள் ரயில் ஓடும்.

ஆனாலும் இறுதிக்கட்டப் பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் செல்வதற்காக மட்டும் ஒரு ரயில் இந்தப்பாதையில் ஓடுகிறது.

தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற சுரங்க ரயிலில் திடீரென்று தீப்பிடித்துக்கொண்டது. தீ மளமளவென்று பரவியது. சுரங்கம் முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது.

தீயில் கருகியும், புகை மண்டலத்தில் சிக்கி மூச்சுத்திணறியும் இரண்டு தொழிலாளர்கள் பலியானார்கள். 50 தீயணைப்புப் படையினர் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.



தெற்குக் காஸாப்பிரதேசத்தில் யூதக்குடியிருப்பிலிருந்து குழந்தையைக் காவிய வண்ணம் தனது வீட்டினை விட்டு வெளியேறும் யூதப் பெண்மணி

## இந்தியாவுடனான நட்பே மிகச் சிறந்தது

## அமெரிக்க செய்தித்தொடர்பாளர்

(வோஷிங்டன்)

"இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடன் அமெரிக்கா நெருங்கிய நட்புறவு வைத்துள்ள போதிலும், இந்தியாவுடனான நட்பே மிகச் சிறந்தது," என அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் சீன் மெக் கோர்மன் தெரிவித்துள்ளார். வோஷிங்டனில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் சீன் மெக் கோர்மக் கூறியதாவது:

இந்தியாவுடனான எங்கள் நட்பு மிகச் சிறந்தது. இருநாட்டின் நட்புறவு வரலாற்றில் இந்தியாவின் நட்பை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். அந்த நட்பை மேலும் வளர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். தீவிரவாதத்திற்கு எதிராகவும், அரசில் மற்றும் பொருளாதார சீர்திருத்தம் உட்பட பல்வேறு பிரச்சினைகளில் பாகிஸ்தானுடன் நாங்கள் கூட்டணி வைத்துள்ளோம். பாகிஸ்தானுடனான நட்பு வரலாற்றை ஐந்தாண்டுகள் பின்நோக்கி பார்த்தோமானால், அந்நாட்டுடனான உறவு ஒரு அர்த்தமற்ற நாடகமாகவே தோன்றுகிறது. ஏனெனில், இந்த ஐந்தாண்டு காலத்தில் பிரச்சினைகளும், சவால்களும் நிறைந்தே இருந்தன. நாங்கள் பாகிஸ்தானுடன் இணைந்து செயற்படுகிறோம். இந்தியாவுடனும் இணைந்து செயற்படுகிறோம். அதேபோல் இப்பகுதியிலுள்ள அனைத்து நாடுகளுடனும் இணைந்து செயற்பட்டு வருகிறோம்.

அந்தந்த நாடுகளுக்கு உள்ள பிரச்சினைகளை கூடிப்பேசித் தீர்த்து வருகிறோம். இவ்வாறு மெக்கோர்மக் கூறினார்.

அமெரிக்காவிலுள்ள குடியரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், குடியரசுக் கட்சியின் முன்னாள் துணைத்தலைவருமான ஜோவில்சன் கூறுகையில், "இந்தியர்கள் தங்களுடைய சுதந்திரதினத்தைக் கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான வேளையில், இந்தியா மிகப்பெரிய வரலாற்றுச்சிறப்பைக் கொண்ட நாடு என்பதிலும் பிரகாசமான எதிர்காலத்தைக் கொண்டநாடு என்பதையும் எண்ணி ஒவ்வொரு இந்தியர்களும் பெருமைப்பட வேண்டும். சமீபத்தில் பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்கா வந்திருந்தபோது ஏற்பட்ட உடன்படிக்கைகள் மூலம் இந்தியா மிகவும் சக்திவாய்ந்த நாடு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது" என்றார்.

## நிலநடுக்கம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நேற்று முன்னிரவு இந்திய நேரப்படி இரவு 10.22 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.5 எனப் பதிவாகியது.

## காலக்கெடு முடிவுக்கு வந்தது

## யூதர்களை வெளியேற்றும் பணியில் இராணுவம்

(காஸா)

மேற்குக்கரை காஸாவில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான யூதக்குடியேற்றக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை இஸ்ரேல் இராணுவம் ஆரம்பித்துள்ளது.

அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு இஸ்ரேல் விடுத்துள்ள காலக்கெடு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்ததையடுத்து இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 38 ஆண்டுகளாகத் தாம் குடியிருந்த மண்ணைவிட்டு அகற்றப்படுவதையிட்டு யூதக் குடியேற்றக்காரர்கள் வன்முறைகளையும் போராட்டங்களையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் இங்குள்ளவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் செப்ரெம்பர் நான்காம் திகதிக்குள் முடிவுக்கு வருமென அந்நாட்டு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கணனி பொறியியலாளரான இந்தியர்

## அமெரிக்காவில் சுட்டுக்கொலை

அமெரிக்காவில் கணனி பொறியியலாளராக வேலை பார்த்த இள்ளஞர்ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் உள்ள 'ஸ்ரார் பைப் புராடக்ட்ஸ்'என்ற நிறுவனத்தில் கணனி பொறியியலாளராக வேலை பார்த்தவர் அகில் சோப்ரா (வயது 28). நான்கு ஆண்டுகளுக்கு முன்பு டெக் சாஸ் பல்கலைக் கழகத்தில் முது அறிவியலாளர் கல்வி கற்பதற்காக அமெரிக்கா சென்றார். ஸ்ரார் பைப் கம்பெனியில் வேலை பார்த்துக்கொண்டே படித்தார்.

கடந்த வியாழக்கிழமை பகல் உணவு உண்டபின் ஒரு பூங்காவுக்குத்தியானம் செய்வதற்காகச் சென்றார்.

அதன் பின் அவர் அலுவலகம் திரும்பவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த சக ஊழியர்கள் பொலிசிற்கு தகவல் கொடுத்தனர்.

பொலிசார் விரைந்து சென்று தேடியபோது, அவர் பூங்காவில் காருக்குள் பிணமாகக் கிடந்தார். அவர் நெற்றியில் குண்டு பாய்ந்த காயம் இருந்தது.

கொலையாளிகள் பற்றி துப்புக் கொடுக்கிறவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று பொலிசார் அறிவித்துள்ளனர்.

# நெல் சந்தைப்படுத்தலில் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு திட்டமிட்ட பயிர் உற்பத்தி அவசியமானதாகும்

## த. பொ. மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் வலியுறுத்து

(விசுவமடு)

**''நெல் சந்தைப்படுத்தலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு திட்டமிட்ட பயிர் உற்பத்தி நடவடிக்கைகளும், கமக்கார அமைப்புக்களின் ஒன்று பட்ட செயற்பாடுகளும் அவசியமானதாகும்'' இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தலில் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஓர் முடிவான தீர்வொன்றைக் காண்பதற்கான முக்கிய கலந்துரையாடல் நிகழ்வு இரணைமடு அக்கராயன் குள வதிவிட திட்ட முகாமையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளன மண்டபத்தில் நேற்று முன்தினம் மு.ப 11.00 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் கலந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தொவித்துள்ளாா். கமக்கார அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு வலுவுள்ளதாக மாற்றுவதன் மூலம் விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். அத்தோடு ஒவ்வொரு வருடமும் நெல் உற்பத்திக் காலத்தில் நெல் சந்தைப்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுவருகிறது. இதற்கு ஓர் நிலையான தீர்வை காணுவதானால் - நாம் திட்டமிட்ட பயிர் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும்.

நெல் உற்பத்தியை மேற்கொள்ளாது, மாற்றுப் பயிர்ச்செய்கை (மறுவகைப் பயிர்ச்செய்கை)யை ஆரம்பிக் வேண்டும்.

உபஉணவு பயிர்ச் செய்கைக்கான குளங்களின் கீழ் உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் சந்தைப் படுத்தலை ஏற்படுத்த முடியும். எல்லோரும் சுலபமாக நெல்லைப் பயிரிட்டு எமது தேவைக்கு மேலதிகமாக நெல் உற்பத்தியை மேற்கொண்டதால் நெல்லை சந்தைப் படுத்தமுடியாத ஓர்நிலை ஏற்பட்டுள்ளது. இதை விவசாயிகள் உணர வேண்டும் - நன்கு திட்டமிட்டு பயிர் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த அவர் வரும் 01-09-2005 ஆம் நாளில் இருந்து கால்நடைகளை இடத்திற்கு இடம் மாற்றுவ தற்கான சகல அனுமதியையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மற்றும் கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சு.மனோகரன், கமக்கார அமைப்பு பிரதி நிதிகள் தெரிவித்த கருத்துக்கள் குறித்து சி.கரிகாலன் கூறும்போது விரைவாக நெல்லை சந்தைப்படுத்துவதற்கு ஓர் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்கை மேற்கொள்ள முடியுமெனக் கூறினார். இதனையடுத்து கமக்கார அமைப்பினர் பயிர் உற்பத்தியில் பெரும் நஷ்டம் அடைந்து வருவதாகவும், நெல்லை சரியான முறையில் ஓரளவுக்கு நெல் உற்பத்தி மேற்கொண்ட செலவு கிடைக்கக் கூடியதாக ஒரு கிலோ நெல் 14 ரூபா விலைக்குக் குறையாமல் வியாபாரிகள் கொள்வனவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

அக்கராயன்குளம் மற்றும் இரணைமடுக்குள வதிவிட திட்ட முகாமையாளர் பொன். நித்தியானந்தன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் மு. செந்தில் பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் ஞா. கர்ணன், த.பொ.மே. நிறுவன நடுவப் பணியக திட்ட அலுவலர்கள், இணைப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (46)

# முள்ளியவளையில் காவல்துறையினரால் குற்றத்தடுப்பு நடவடிக்கை தீவிரம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச காவல்துறையினரால் குற்றத்தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

முள்ளியவளைப் பிரதேச காவல்துறையினர் முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட சகல பகுதிகளிலும், குற்றத் தடுப்பு நடவடிக்கையினை தீவிரப்படுத்தி வருகின்றனர். அதிவேகமாகச் செல்லும் வாகனங்களுக்கும் உந்துருளிகளுக்கும், ஈருருளியில் பக்கம் பக்கமாக செல்வோர்கள் மீதும் குற்றத் தடுப்பு நடவடிக்கையில் குற்றப்பணம் அறவிடுவதுடன் இரவு வேளைகளில் மின் விளக்கின்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் தேவை இன்றி இரவு வேளைகளில் நடமாடுபவர்கள் மீது சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேற்படி நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு இரவு வேளைகளில் காவல் துறையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் இங்கு இடம்பெற்ற குற்றச் செயற்பாடுகளில் முன்பை விட குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பல் மருத்துவ சிகிச்சை

(முல்லைத்தீவு)

ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்திருந்த பல் மருத்துவ நிபுணர் பேராசிரியர் அரியரட்ணம் முல்லை. மாவட்ட வைத்தியசாலையில் பல் மருத்துவத்தை கடந்த 10 ஆம் திகதி மேற்கொண்டார்.

குறிப்பாக வாய்ப்புண், வாய் எரிவு, வாய்சத்திர சிகிச்சை, அலகு நோய் முரசு வீக்கம், முரசுப் புண் சம்பந்தமான சிகிச்சையும் ஆலோசனைகளும் வழங்கினார்.

இதில் பெருமளவான நோயாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (20)



கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தினரால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியால் மீன்பிடி உபகரணங்களை இழந்த 16 அங்கத்தவர்களுக்கு மீன்பிடி வலைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இதில் அருட்சகோதரி லூட்ஸ் ஜோசப் அங்கத்தவர் ஒருவருக்கு வழங்குவதையும் அருகில் கரைச்சிப் பிரதேச சபை ஆணையாளர். பொன் நித்தயானந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:குகன்)

# பண்டார வன்னியன் நினைவு நாள் கற்சிலைமடுவில்

வன்னியின் இறுதி மன்னன் பண்டார வன்னியனின் நினைவு நாள் எதிர்வரும் 25 ஆம் நாள் முல்லைத்தீவு கற்சிலைமடுவில் இடம்பெறவுள்ளது.

முல்லைதீவு அரச அதிபர் இமெல்டாசுகுமார் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கற்சிலைமடுவில் மாவீரன் பண்டாரவன்னியன் சிலையமைந்துள்ள வளாகத்திலேயே இந் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. மாவீரன் பண்டார வன்னியன் ஆங்கிலேயே படைத்தளபதியினால் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் நினைவுக்கல் கற்சிலைமடுவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்கராயன் சந்தியில் பொது மலசல கூடங்கள் இல்லை விரைவில் அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி அக்கராயன் சந்திப் பகுதியில் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இச் சந்திப் பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட வீடுகளும், மூன்று உணவகங்களும் உள்ளன.

இந் நிலையில் இச் சந்திப் பகுதியில் நிரந்தர மலசலகூடங்கள் எதுவும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

நாள்தோறும் பத்து வரையான பேருந்துகள் இச் சந்தியில் தரித்து நிற்கும் நிலையில் பேருந்திலிருந்து இறங்கும் பயணிகள் மலசலகூட வசதிகள் இல்லாததால் அவதிக் குள்ளாகின்றனர்.

உணவகங்களின் பின்னால் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர் நாற்றம் வீசுகிறது.

இந்நிலை தொடர்பாக இப் பகுதியில் வசிக்கும் மக்கள் சுகாதார அலுவலர்களிடம் முறைப்பாடு செய்தும் எந்தவித முன்னேற்றமும், ஏற்படவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இப் பகுதியில் மக்களினதும், பயணிகளின் நன்மை கருதியும் மலசல கூடங்களை விரைவில் அமைத்துத் தருமாறு மக்கள் கிராம அலுவலர்களிடமும், சுகாதார அலுவலர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப் பகுதியில் சூழல் பேணப்படாத நிலை தொடருமானால் தொற்று நோய்கள் பரவலாம் என அஞ்சப்படுகிறது.

# பிற்போடப்பட்டது

(தென்மராட்சி)

நாளை யாழ். பலநோக்குக் கூட்டுறுவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்த "கண்ணீர் பயணங்கள்'' பாகம் I,II நூல் வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளதாக கவிதை நூல் வெளியீட்டு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

வெளியீட்டுவிழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் ஏற்பாட்டுக் குழு தெரிவிக்கின்றது. (28)

# போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களிற்கு த.பு.கழகத்தால் ரூபா 40 இலட்சம் பெறுமதியான நிவாரணப் பொருட்கள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தங்க வேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு ஆகிய கிராமங்களிற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்குகிறது.

இக் கிராமங்கள் போரினால் மிகவும்பாதிக்கப்பட்ட கிராமங்களாகும். இது திருக்கோயில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாகும். 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட அகோர யுத்தத்தின் விளைவாக இவ்விரு கிராமங்களையும் சேர்ந்த அனைத்து மக்களும் கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்திருந்தனர்.

சமாதான ஒப்பந்தத்தின் பின் மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்ட போதும் இன்றுவரை அவர்களுக்கான அடிப்படை வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இவ்விரு கிராமங்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்கியது.

சுமார் நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான இந் நிவாரணப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று வழங்கினார்கள். இந் நிகழ்வினை அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் பொ.ஆதவன், அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் ஆரம்பித்து வைத்து செயற்படுத்தினர்.



ஆனைவிழுந்தானுக்கும், வன்னேரிக்குளத்திற்கும் இடையிலுள்ள காட்டுப் பகுதியிலுள்ள சுமார் 800 இற்கும் மேற்பட்ட தேக்கு மரங்கள் எரிந்து கருகிய நிலையில் உள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-பிரதீபன்)

# அளம்பில் மத்திய மருந்தக திறப்பு விழா இன்று

(முள்ளியவளை)

செம்மலை அளம்பில் மத்திய மருந்தகம் இன்று காலை 11.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாக தாய் சேய் நல வைத்திய கலாநிதி க.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக முல்லை. மாவட்ட அரச அதிபர் தி.இமெல்டா சுகுமாரும், கௌரவ விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், முல்லை. மாவட்ட நிகொட் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ரகுநாதப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## மீளளிப்பு தொடர்பான நடை முறைகள்

1. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.
2. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும் அல்லது கடன்சான்றிதழாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதத்தைக்கொண்டுவர வேண்டும்.
3. கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டு வரவேண்டும்.
    - இறப்புச் சான்றிதழ்
    - இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
    - கடன் சான்றிதழ்
    - பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
    - பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.
4. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
5. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கபட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

    ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.
6. கடன்சான்றிதழைத் தவறவிட்டவர் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
7. கடன் சான்றிதழாளரும் மறுஉரித்தாளரும் இறந்திருப்பின் சட்ட முறையான உரித்தாளருக்கு மீளளிக்கப்படும். சட்டமுறையான உரித்தாளர் ஒருவருக்கு மேற்படின் உரித்துடைய அனைவருக்கும் சேர்த்து வழங்கப்படும். உரித்துடையவர்களில் எவராவது ஒருவர் ஏனையோரின் எழுத்து மூலமான ஒப்புதலுடன் மீளப்பெற்றுக்கொள்ளலாம். அவ்வொப்புதல் கிராமசேவையாளராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத்தப்படவேண்டும். சட்டமுறையான உரித்தாளர் யார் என்பதை முறைப்படி உறுதிப்படுத்த வேண்டும்.
    - கடன்சான்றிதழாளரின் இறப்புச் சான்றிதழ்
    - மறுஉரித்தாளரின் இறப்புச் சான்றிதழ்
    - இரண்டினதும் படி
    - கடன்சான்றிதழ்
    - கடனை மீளப்பெறவுள்ளவரின் அடையாள ஆவணம்
    - கடனைப் மீளப்பெறவுள்ளவரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்
    - மறுஉரித்தாளரின் சட்டமுறையான உரித்தாளர் எத்தனை பேர் என்பதையும் யார் யாரென்பதையும் உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரும் உதவி அரசாங்க அதிபரும் வழங்கிய கடிதம்.

## தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியல்

### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

**மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு**

யா/மா/135 திரு.பொன்னையா சண்முகபாரதி
யா/மா/372 திரு.வேலாயுதம் ஜெகதீஸ்வரன்
யா/மா/466 திரு.தம்பு சுப்பிரமணியம்
யா/மா/509 திரு.பொன்னுச்சாமி பாஸ்கரன்
யா/மா/517 திருமதி.கோமளாம்பாள்சுப்பிரமணியம்
யா/மா/620 திரு. முத்துத்தம்பி சந்திரலிங்கம்
யா/மா/717 திரு. ஆசீர்வாதம் அமலதாஸ்
யா/மா/865 திருமதி. இராஜேஸ்வரி நகுலராஜா
யா/மா/978 திரு. காசித்தம்பி வடிவேலு
யா/மா/1012 திரு. அருளானந்தம் யேசுதாசன்
யா/மா/1366 திருமதி. சிவபாக்கியம் கனகசபை
யா/மா/1576 திரு. தில்லையம்பலம் யோகானந்தன்
யா/மா/1620 திரு. வல்லிபுரம் கதிரவேலு
யா/மா/1691 திரு.கணபதிப்பிள்ளை
விநாயகமூர்த்தி
யா/மா/1710 திருமதி. மேரிமொறீன் ஜெயந்தகுமார்
யா/மா/1904 திருமதி. திலகேஸ்வரி லோகநாதன்
யா/மா/2304 திரு. நடராசா கந்தசாமி
யா/மா/2331 திருமதி. மேரிஸ்ரெலா எட்வேட்
யா/மா/2581 திரு. அந்தோனி பெனடிற்
யா/மா/2620 திரு. நடராசா குகதாசன்
யா/மா/2703 திருமதி. பார்வதி செல்லையா
யா/மா/2811 திரு. செலியூஸ் வேதநாயகம்
யா/மா/2827 திரு. ஞானப்பிரகாசம்
மரியயோசப்ஞானராசா
யா/மா/2895 திருமதி. அல்போஞ்சம்மா முத்துராசா
யா/மா/2912 திருமதி. இராசமலர் உருத்திரமூர்த்தி
யா/மா/3078 திருமதி. லூசியாசொர்ணம்
ஸ்ரனிசிலாஸ்
யா/மா/3253 திரு. கவிரியேற்பிள்ளை சவரிமுத்து
அந்தோனிப்பிள்ளை
யா/மா/3273 திரு. மரியாம்பிள்ளை யோசேப்பு
யா/மா/3301 திரு. ஜோசேப்பு அன்ரன்பிரான்சீஸ்
யா/மா/3467 திரு. வல்லிபுரம் பெரியதம்பி
யா/மா/3586 திரு. இராசதுரை ஜெகதீஸ்வரன்
யா/மா/3855 திரு. ஐயாத்துரை தங்கராசா
யா/மா/3861 திரு. சரவணமுத்து தம்பிமுத்து
தெய்வேந்திரம்
யா/மா/3932 திருமதி. மகேஸ்வரி சண்முகம்
யா/மா/3972 திரு. ஆறுமுகம் திருநாவுக்கரசு
யா/மா/4251 திரு. சிவக்கொழுந்து விவேகானந்தன்
யா/மா/4273 திரு. நவரத்தினம் குலசிங்கம்
(குணபாலன்)
யா/மா/4336 திரு. சண்முகம் பரமேஸ்வரன்
யா/மா/4471 திரு. இராசதுரை விக்னேஸ்வரன்
யா/மா/4532 திரு. இராயப்பு டேவிட்
யா/மா/4533 திருமதி. செல்வராணி யேசுதாஸன்
யா/மா/4574 திரு. ஆசையர் செல்வராசா
யா/மா/4592 திருமதி. குணமலர் பூபாலபிள்ளை
யா/மா/4657 திரு. செருசலை சிங்கராசா
யா/மா/4790 திரு. சிவம்பிள்ளை அலோசியஸ்
இரத்தினம்
யா/மா/4860 திரு. இராகவன் கருணாகரன்
யா/மா/4938 திருமதி. மேரியூபிரேசியா
செங்கோல்ராஜா
யா/மா/4959 திருமதி. அன்னலட்சுமி தணிகாசலம்
யா/மா/5489 திருமதி. இராசகுமாரிஅன்ரன்
விஜயேந்திரன்
யா/மா/5529 திரு. சிதம்பரிசிவம்
யா/மா/5673 திருமதி. பத்மாவதி அம்பலவாணர்
யா/மா/5699 திருமதி. மீனலோஜனி சங்கரப்பிள்ளை
யா/மா/5745 திருமதி. நாகேஸ்வரி தியாகராஜா
யா/மா/5851 திரு. தாமோதரம்பிள்ளை லோகேந்திரன்
யா/மா/5879 திரு. கந்தசாமி சிறீதரன்
யா/மா/5923 திருமதி. சிவபாக்கியம் சுப்பையா
யா/மா/5963 திரு. குருசாமி ராசகுமார்
யா/மா/5975 திரு. செல்லையா பாஸ்கரன்
யா/மா/6148 திருமதி. கமலா பன்னீர்ச்செல்வம்
யா/மா/6175 திரு. யோசவ் மகேந்திரன்
யா/மா/6257 திரு. சின்னசுவாமிசர்மா பாலசண்முகன்
யா/மா/6283 திருமதி. யோகேஸ்வரி தர்மராஜா
யா/மா/6301 திருமதி. மகேஸ்வரி தம்பையா
யா/மா/6345 திரு. பாலசிங்கம் பாஸ்கரன்
யா/மா/6393 திருமதி. சத்தியபாமா நவரத்தினம்
யா/மா/6435 திரு. சிவசுப்பிரமணியம் சந்திர
மௌலீசன்
யா/மா/6847 திரு. நடராசா சுப்பையா
யா/மா/6880 திரு. அருளப்பு தேவதாஸ்
யா/மா/6991 திரு. வைரமுத்து செல்வம்

**நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு**

யா/ந/189 திரு. முத்தன் இராசன்
யா/ந/207 திருமதி. சுகிர்தம்மா அருளம்பலம்
யா/ந/208 திரு. வல்லிபுரம் தியாகராசா
யா/ந/236 திரு. கந்தையா யோகேஸ்வரராசா
யா/ந/268 திருமதி. சரஸ்வதி பரராசசிங்கம்
யா/ந/352 திரு. பொன்னுத்துரை மனோரஞ்சிதம்
யா/ந/486 திரு. சின்னத்தம்பி குகநேசன்
யா/ந/501 திருமதி. புவனராணி பரமேஸ்வரன்
யா/ந/750 திருமதி. இராஜேஸ்வரி நடராசா
யா/ந/780 திரு. முத்தையா பத்மநாபன்
யா/ந/793 திருமதி. வரதலெட்சுமி இராமசேகரம்
யா/ந/1051 திரு. சின்னத்துரை சுகிர்தகுமார்
யா/ந/1147 திரு. கணபதிப்பிள்ளை குணரத்தினம்
யா/ந/1184 திருமதி. ஜெயசோதி மகாதேவா
யா/ந/1719 திருமதி. சின்னட்டி துரைசிங்கம்
யா/ந/2130 திரு. யோசேப்பு பிரான்சிஸ்
யா/ந/2206 திருமதி. மகிழ்மலர் மாணிக்கவாசகர்
யா/ந/2253 திருமதி. பிறேமாவதி நடராஜா
யா/ந/2264 திருமதி. பராசக்தி நடராசா
யா/ந/2282 திருமதி. இராசநாயகி கந்தசாமி
யா/ந/2454 திரு. தர்மலிங்கம் சண்முகநாதன்
யா/ந/2506 திருமதி. பரமேஸ்வரி சங்கநாதபிள்ளை
யா/ந/2551 திரு. வைத்திலிங்கம் லிங்கேஸ்வரன்
யா/ந/2647 திருமதி. பகவதி விஜியசேகரம்
யா/ந/2788 திருமதி. அன்னபூரணம் பாலசிங்கம்
யா/ந/2901 திரு. முத்துச்சாமி பாலேந்திரா
யா/ந/2931 திரு. கந்தையா இரத்தினசிங்கம்
யா/ந/3084 திரு. சபாபதி கதிரேசு யோகநாதன்
யா/ந/3094 திருமதி. சிரோன்மணி கணேஷ்
யா/ந/3116 திருமதி. குணநாயகி மகாதேவா
யா/ந/3221 திரு. நாகேந்திரர் இராமனாதன்
யா/ந/3270 திருமதி. சற்குணவதி குகதாசன்
யா/ந/3325 திரு. தம்பையா தேவராசா
யா/ந/3540 திருமதி. சின்னம்மா நடராசா
யா/ந/3563 செல்வி. வசந்தாதேவி தர்மலிங்கம்
யா/ந/3584 திரு. தங்கராசா ஜெயசுப்பிரமணியம்
யா/ந/3943 திரு. செல்லத்துரை வேலாயுதபிள்ளை
யா/ந/4102 செல்வி. வைத்தியக்கலாநிதி பரமேஸ்வரி
சின்னப்பா
யா/ந/4181 திரு. வல்லிபுரம் மகாலிங்கம்
யா/ந/4411 திருமதி. இரத்தினம் கெங்காதரன்
யா/ந/4674 திருமதி. கனகலட்சுமி வில்வரெட்ணம்
யா/ந/4785 திருமதி. நகுலேஸ்வரி ஜெகநாதன்
யா/ந/4860 திரு. நன்னித்தம்பி பூபாலசிங்கம்
யா/ந/5211 திருமதி. கமலராணி குணபாலசிங்கம்
யா/ந/5308 திரு. வேலன் பொன்னன்
யா/ந/5361 திருமதி. றாதா றாதாகிருஷ்ணன்
யா/ந/5487 திருமதி. ஜெயராணி லிங்கதாசன்
யா/ந/5905 திரு. செல்வத்துரை கதிர்காமத்தம்பி
யா/ந/6050 திருமதி. ராசம்மா நாராயணன்
யா/ந/6067 திருமதி. இராசமணி சச்சிதானந்தன்

(தொடரும்)

ஈழத்தமிழர்கள் மீது சிங்களபேரினவாதிகளால் மேற்கொள்ளபட்டுவந்த கெடுபிடிகளை எதிர்த்தும்,தமிழ் பெண்கள் பேரினவாதிகளால் மிக மோசமாக இழிவுபடுத்தப்பட்டதை அடுத்தும் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தாமாகவே முன்வந்து இணைந்து கொண்டு ஆயுதப்பயிற்சிகளை பெறத்தொடங்கி இன்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இந்த 20 ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியின் வளர்ச்சி என்பது வியக்கத்தகுந்த தொன்றாகவே அமைகிறது.

சிறிலங்கா அரசாங்கத்தின் முப்படைகளுக்கும் எதிரான போரில் தனித்து நின்று தாக்குதலை நடத்தும் அளவிற்கு மரபு வழி இராணுவமாக மகளிர் படையணி வளர்ச்சி பெற்றமை என்பது உலகையே இராணுவ

பெண்போராளிகளுடன் மாலதி படையணியில் இருந்த சில போராளிகளும் இணைக்கப்பட்டு சோதியா படையணி உருவாக்கம்பெற்றது.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் மகளிர் படையணியாக இயங்கிய அணிகள் 1996 ஆம் ஆண்டு புதிய படையணிகளின் விரிவாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு எதிரி மீதான தாக்குதலுக்கு தயாராகின்றன. சோதியா படையணி உருப்பெற்றபின் முதன் முதலாக 1997.01.09 அன்று ஆனையிறவு படைத்தளத்தினுள் புகுந்து நடத்தப்பட்ட ஆட்லறிகள் தகர்ப்புச் சமரில் பங்குகொள்கின்றன.

இவற்றோடு நின்று விடாது எதிரியின் தாக்குதல்களுக்கு ஏற்ப அவற்றை முறியடிக்கும் வகையிலும் எதிரிமீதான தாக்குதலை தீவிரப்படுத்தும் வகையிலும் இன்னும் பல அணிகளும் உருவாக்கம்பெறத் தொடங்கின. இதன் அடுத்த கட்டமாக லெப்கேணல்.



தலைமை தாங்கினார்.

இவ்வாறு மகளிர் படையணிகளின் உருவாக்கங்கள் காலத்தின் தேவைக் கேற்பவும் உருவாக்கம் பெற்றதோடு தமிழீழவிடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவு, அரசியல்பிரிவு போன்றவற்றிலும் மகளிர் அணியினரின்

# காலத்தின் தேவைக்கேற்ப படையணிகள் உருவாக்கம் பெற்றன

நேற்றைய தொடர்ச்சி



ரீதியில் வியக்கவைக்கும் விடயமாகும்.மகளிர் அணி என ஆரம்பமான இவ் அணி காலப் போக்கில் எதிரியின் ஒவ்வொரு நகர்வுகளையும் எதிர்க்கக் கூடிய படையணிப்பிரிவுகளையும் ஏற்படுத்திக்கொண்டது. அதுவரை காலமும் தரைவழியில் மட்டும் சண்டையிட்டு வந்த பெண்கள் 1992.03.01ஆம் நாள் தொடக்கம் கடற்புலிகள் அணியிலும் தம்மை இணைத்துக்

பென்னம்மான் கண்ணிவெடிப்பிரிவின் உருவாக்கம் அமைகிறது. ஏற்கனவே இருந்த கண்ணிவெடிப்பிரிவினருடன் புதிய போராளிகளும் உள்வாங்கப்பட்டு 1999.02.11 அன்று இப்படையணி உருவாக்கம் பெற்றது.

இதைவிட மகளிர் அணியின் மோட்டார் படையணியின் உருவாக்கமும் மகளிர் அணியின் வளர்ச்சியில் (முக்கியமானதொரு



கொண்டனர்.இம் மகளிர் அணியினர் கடற்புலிகளில் இணைக்கப்பட்டு முதன் முதலாக கிளாலியில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையை வழிமறித்து நடத்தப்பட்ட தாக்குதலில் பங்குபற்றினார். இதன் பின்னர் பூநகரி இராணுவ முகாம் தாக்குதலான ஒபறேசன் தவளை நடவடிக்கையில் கடற்புலிகளின் மகளிர் அணி மிகப்பெரும் பங்கு வகித்தது.

மகளிர் அணியின் வளர்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக 1996 ஆம் ஆண்டு அமைகின்றது. அதாவது 1996.01.01

காலமாகும். 1992 ஆம் ஆண்டு ஆண் போராளிகளும், பெண்போராளிகளும் இணைக்கப்பட்டு மோட்டார் படையணிக்கான பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் நிறைவில் நடாத்தப்பட்ட போட்டியில் ஆண்களும், பெண்களும் இணைந்து பங்குபற்றினர். இதில் வெற்றி பெற்றவர் லெப்.கேணல் காவியா எனப்படும் பெண்போராளியொருவர் இவருக்கு தலைவரால் பரிசிலும் வழங்கப்பட்டது.தொடர்ந்து லெப்கேணல். பவநிதி மோட்டார் படையணி உருவாக்கம் பெற்றது. அத்தோடு விடுதலைப் புலிகளின் பலத்தை உலகம் கண்டு வியந்த சமரான ஜெயசிக்குறு படை நடவடிக்கைக் கெதிர்சமரில் 120 மில்லி மீற்றர் மோட்டார்களையும் இயக்கும் அளவிற்கு பெண்கள் மோட்டார் படையணிகள் பலம் பெற்றன. இக்காலப் பகுதியில் கிட்டுப்பீரங்கிப் படையணியின் உருவாக்கமும் எதிரியின் நகர்விற்கு கேள்விக் குறியாக அமைந்தது. தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு குட்டிசிறி மோட்டார் படையணி உருவாக்கம் பெற்றது. இதில் மகளிர் அணியின் தளபதியாக லெப்.கேணல் பவநிதி



ஆம் நாள் மகளிர் அணியென செயற்பட்ட அணி மாலதி படையணியென உருவாக்கம் பெற்றது. தொடர்ந்து இதே ஆண்டு ஏழாம் மாதம் 14 ஆம் திகதி புதிதாக பயிற்சி முடித்த

## 20 ஆம் ஆண்டு நிறைவில் மகளிர் படையணி

விடுதலைப்புலிகளின் வளர்ச்சிப்படி நிலைகளுக்கேற்பவும் விரிவுபட்டுவந்தன.

அத்தோடு விடுதலைப்புலிகளின் ஆயுதப் பலத்தில் மிக பலம் பொருந்திய ஆயுதமாகத் திகழும் கரும்புலிகள் அணியிலும்,மகளிர் அணியினர் உருவாக்கம் பெற்றனர். 1994 ஆம் ஆண்டு சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவுப்

செயற்பாடு சமூகத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

தற்காலத்தில் அதன்படையணிகள் பலதரப்பட்ட தாக்குதல்களை மேற் கொள்ளக் கூடியவாறும் எந்தவொரு தாக்குதலையும் எதிர் கொள்ளக்கூடியவாறும் உருவாக்கம் பெற்றுள்ளதோடு மகளிர் கடற்புலிகள்



போராளி அங்கயற்கண்ணி "கட்டளைக்" கப்பல் மீதான கரும்புலித் தாக்குதலை நடத்தியதோடு மகளிர் அணியின் கரும்புலிகள் அணியின் தாக்குதல் தொடங்கியது. தொடர்ந்து தாண்டிக்குளம் இராணுவ முகாம் மீது யாழினி நடத்திய கரும்புலித் தாக்குதல் தரைத் தாக்குதல் மகளிர் அணியின் முதல் தரை கரும்புலித் தாக்குதலாக அமைந்தது. இவ்வாறு மகளிர் படையணியினரின் பல படையணிகள்

அணியில்மட்டும் நான்கிற்கு மேற்பட்ட அணிகளைக் கொண்டு உருவாக்கம் பெற்றுள்ளன.இவ்வாறு 1985 ஆம் ஆண்டு

இ.சசிக்குமார்

உருவாக்கம்பெற்ற விடுதலைப்புலிகளின் மகளிர் அணி இந்த 20 ஆண்டுகளுக்குள் அடைந்துள்ளவளர்ச்சியானது வியக்கத்தக்க தொன்றாகவே அமைகிறது.

முற்றும்

# கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான

# வருடாந்த இரதோற்சவ சிறப்பிதழ் 18-08-2005



கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா

இன்று கிளிநொச்சி கந்தசுவாமி கோவில்
தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.
இந்நாளில் தேரிலேறி வீதியுலாவரும்
எம்பொருமான்– வள்ளி மணவாளன்
தமிழ்மக்களின் சுபீட்சமான நல்வாழ்வுக்கு
கருணை புரிய வேண்டும் என
பிரார்த்திக்கின்றோம்.

(சி.12540)

## ஏ.எம்.ரி ரான்ஸ் போட் சேவிஸ்
## (A.M.T)

No-71 SHOE ROAD, KOTAHENA,
COLOMBO

பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்தி, கோப்பாய்
யாழ்ப்பாணம் T.P- 0212225784

---

திருநகர் வீதியில்
முன்னணி மிக்க வாணிபம்

## நயினை நாகம்மன்
## பல் பொருள் வாணிபம்



இன்று தேரிலேறி வீதியுலாவரும்
எம்பொருமான்– வள்ளி மணவாளன்
தமிழ்மக்களின் சுபீட்சமான நல்வாழ்வுக்கு
கருணை புரிய வேண்டும் என
பிரார்த்திக்கின்றோம்.

(சி.12541)

உரிமையாளர்
சிவலிங்கம் பாஸ்கரன்

---

## ஜெகம்
## நகை அகம்

மங்கையர் கண்கவரும் டிசைன்களில்
அசல் 22 கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழிநுட்பவல்லுனர்களால்
மனதைக் கவர்ந்தடிசைன்களில் செய்து
கொள்ள இன்றே நாடுங்கள்
நவீன முறையில் ரிசின் கட்டிங்கர்
செய்து கொடுக்கப்படும்.



(சி.12534)

கரடிப்போக்கு, கிளிநொச்சி T.P-021- 2285753

---

## மக்கள் வங்கி

உங்களின் எதிர்காலத்தைத் திட்டமிட இன்றே
மக்கள் வங்கியில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்

இன்று தேரில் பவனி வரும் கலியுகவரதனான கிளிநொச்சி
அருள்மிகு கந்தனின் அருளாசிகள் எல்லோருக்கும்
கிடைத்திட வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஊழியர்கள்.

மக்கள் மனமறிந்த
வங்கி மக்கள் வங்கி

(சி.12533)

யாழ். சாலை கிளிநொச்சி

---



மீண்டும் புதுப் பொலிவுடன்...... உங்களின் இக்காலத் தெரிவுக்கு

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

எல்லா வகையான உயர்ரக
இந்திய சாறிவகைகள் துணிவகைகள்
விதவிதமான சிறுவர் ஆடைகள்
நவீனரக புடைவைகள் மற்றும் ரெடிமேட்
ஆடைகளைப் பெற்றுக்கொள்ளலாம்



(சி.12535)

யாழ்.சாலை கிளிநொச்சி T.P.021 228 5971

# கிளிநொச்சி கந்த

# தேர்த்திருவிழா சிறப்பி


முருகன் திணை

புடவையகம்

நவநாகரிக நங்கையர் விரும்பும்
நவீனரக ஆடைகளுக்கும்
புத்தம் புதிய பட்டுப் புடவைகளுக்கும்
கைராசியான நிறுவனம்

(சி-12606) யாழ். சாலை கிளிநொச்சி



இன்று தேர் மீது பவனிவரும்
கந்தன் அருளால்
எங்கள் நாடு சாந்தி சமாதானமாக
இருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில் செய்து
பெற்றுக்கொள்ள

(சி-12545)

மணி ஐயப்பா நகைமாடம்
(தங்கப் பவுண் நகைவியாபாரம்)
யாழ். சாலை கிளிநொச்சி. தொ.பே. 0776013572

மெய் மெய் உதிரிகள்

வாணிபம்

உழவு இயந்திர உதிரிகள்,
மோட்டார் சைக்கிள் உதிரிகள்,
சகல வாகன பற்றறி வகைகளுக்கும்
சிறந்தனவற்றைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

யாழ்.சாலை, கிளிநொச்சி. (சி-12547)

திண்ணன் வேளாண் பொருள் வாணிபம்

(சுபாஜினி றேடர்ஸ்)

சீ.ஐ.சீ ஏக விநியோகஸ்தர்,
மக்வூட் கொம்பனி கிருமிநாசினி ஏக விநியோகஸ்தர்,
மற்றும் கிருமி நாசினி வகைகள்,உரவகைகள்,
தெளிகருவிகள் மொத்தமாகவும்,சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

யாழ்.சாலை, (சி-12548) கிளிநொச்சி.

தரம் நம்பிக்கை நிதான விலையில்
மங்கையர் மனங்கவரும்
ஆடை தினுசுகள்.

திருமண பட்டுச் சாறிவகைகள்
சோளிகிற்,சேட்டிங்,-சூட்டிங், சேட்
வகைகள், ஸ்கேட்-பிளவுஸ்,கவுண்,பஞ்சாபி சூட்,
பட்டுவேட்டி, பேபி சூட்,சிறுவர் சிறுமியருக்கேற்ற
றெடிமேற் ஆடைகள்

அனைத்திற்கும்சிறந்த ஸ்தாபனம்

முத்துப்பிள்ளையார்

(சி-12603)

வண்ணச்சோலை

மல்லாவி, கிளிநொச்சி


## நாளை எம் தேசத்

## ஈழத்துக் கந்தன் ஆறுமு



### ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் பெருமைகளை எடுத்தியம்பும் பல சிறப்பம்சங்களில் ஒன்றாக விளங்குவது கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் என்றால் அது மிகையாகாது .இவ் ஆலயத்தின் முருகப்பெருமான் இன்று 18.08.2005 தேர் ஊர்தியில் பவனிவந்து எம்மக்களுக்கு காட்சி கொடுத்து அடியவர்களின் துயர் தீர்க்கும் நந்நாளாகும் இவ் நகரமையத்தில் அமைந்திருக்கும் முருகப்பெருமான் அடியவர்களுக்கு ஆண்மீக பலத்தை அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார். இன்றைய தேரில் வள்ளி, தெய்வானையுடன் காட்சிதரும் எம் பெருமான், ஆன்மாக்களின் மும் மலங்களாகிய ஆணவம்,கன்மம், மாயை அழித்துப் புதுப் பொலிவுடன் புனிதர்களாக மாற்றும் நந்நாளாகும் இன்று தேரேறிப்பவனிவரும் முருகப் பெருமானுடைய அருளாசிகள் எல்லோர்க்கும் கிட்டுவதாகுக.மேலும் எமது மாவட்டமும் மக்களும் மீண்டும் பொலிவு பெற்று வாழச் சாந்தியும் சமாதானமும் நிலைக்க வேண்டும் என எல்லாம் வல்லமுருகப் பெருமானை வேண்டிநிற்கின்றேன்.

சுலோஜினி,
கரைச்சிப் பிரதேச செயலர், கிளிநொச்சி.

### மகோற்சவக் குரு

நாடிவரும் பக்தர்களு
கந்தப்பெருமான் பார்த்
கண்டு தரிசித்து அவ
படைத்தல், காத்தல், அ
தத்துவங்களை விளக்
தேவர்கள் துயரம் நீக்கிய மு
குறைவற்ற செல்வம்
வாழ்த்துகின்றேன்.

### 2005 ஆம் ஆண்டு

18.08.2005 இன்று எம்
தேரில்பவனி வந்து சகல உ
ருக்கிறார். சகல மக்களும் இ
நிம்மதியாகவும் வா
வேண்டிக்கொண்டிருக்கிறார்க
இராணுவ நடவடிக்கையால் த
மக்கள் மீண்டும் தத்தமது
ஆலயங்களைப் புனருத்தாரண
செய்து வணங்கிக் கொண்டி
தெய்வநம்பிக்கை இதற்கு கா
பிரபாகரனும், தளபதிகள், 
வேண்டி, இம்மண்மீட்பில் வீர
ஒரு கணம் நினைத்து தலை
தேரில் பவனிவரும் முருகப்


தங்கமாளிகை

பல்பொருள் வாணிபம்

உங்களுக்குத் தேவையான
இலத்திரனியல் பொருட்களையும்
ஆடம்பரப் பொருட்களையும்
அன்பளிப்புப் பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

(சி-12605)

யாழ்.சாலை கிளிநொச்சி

சிவபாக்கிய

சிவபாக்கிய

(சி-12608)

உங்களுக்குத் தேவையான சைவ, அசைவ
உணவு வகைகளை சுகாதார முறைப்படி
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

கற்பகம் இன்சுவையகம்

(சி-12607)

மாவட்ட வைத்தியசாலை முன்பாக,
கண்டி வீதி, கிளி நொச்சி.



# ...சுவாமி கோயில்

# ...தேழ்-18-08-2005

## ...தில் நல்லதீர்வு தர ...கன் தேரேறி வருகிறான்

### ...வின் வாழ்த்துச்செய்தி

...க்கு கோடிவரமளிக்கும் கிளிநொச்சி ...பவருடம் (2005) மகோற்சவத்தைக் ...ன் திருவருளை பெற்றுக்கொண்டு ...ழித்தல், மறைத்தல், அருளல் என்ற ...கின்றதே மகோற்சவ விழாவாகும். ...ருகன் அடியார் குறைநீக்கி நல்வாழ்வும் ...தந்தருளவேண்டுமென்று மனமாற

மகோற்சவக்குரு,
கிரியாசிரோமணி,
...சிவஸ்ரீ இ. ஜெகதீஸ்வரக்குருக்கள்.

### ...ந்தப் பெருமானின் தேர்ப்பவனி

...ளிநொச்சி அருள்மிகு முருகப்பெருமான் ...ரினங்களுக்கும் அருள் பாலித்துக்கொண்டி ...நாட்டில் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும், ...வேண்டுமென எம் பெருமானை ... இம்மாவட்டத்தின் பல ஆண்டுகாலமாக ...துஉடமைகளை இழந்து சிதறி ஓடித்திரிந்த ... இடங்களில் மீளக்குடியேறி முதற்கண் ... கும்பாபிஷேகம் செய்து திருவிழாக்கள் ...க்கிறோம். நல்வாழ்வு கிடைக்கும் என்னும் ...ணகர்த்தாவாக இருந்த தானைத்தலைவன் ...ராளிகள் நீடூழிகாலம் வாழவேண்டுமென ...வியமான கரும்புலிகள், மாவீரர்களையும் ...ணங்கி இவர்களது ஆத்மா சாந்தியடைய ...ருமானை வேண்டுகின்றோம்.

செல்லையா செல்வரத்தினம்,
செயலாளர்,நிர்வாகத்தினர்,
தேர்த்திருப்பணிசபை,திருப்பணிசபை
உறுப்பினர்கள்.



### 2005 ஆம் ஆண்டு கந்தப் பெருமானின் தேர்ப்பவனி

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் நகர மத்தியில் அமைந்து வர்த்தக, விவசாயிகள், அடியார்கள் யாவருக்கும் கருணை மழை பொழிந்து கொண்டிருக்கிறார். எம்பெருமானுக்கு இவ்வருட கொடியேற்றவிழா 10.08.2005 ஆரம்பமாகி இன்று 18-08-2005 தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருங்காட்சி கொடுத்து வருகின்றார்.

இத்தினத்தில் எமது ஆணவம் அழிவுற்று அன்பும் அறவாழ்வும், சிறப்புறத் திகழ கந்தனை வேண்டுவோம். எமது மாவட்டத்தில் சைவசமய வளர்ச்சிக்குரிய ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை கோவில்களின் அறங்காவலர்களே தேர்த்திருவிழாக் காலங்களில் ஆன்மீக சிந்தனைகள் மேலோங்கவும் வீடுகள் தோறும் விருந்தோம்பல் பணிகள் மேலோங்கவும் நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என முருகன் தாள்பணிந்து வேண்டுகின்றோம்.

நன்றி,

பொன். நித்தியானந்தன்,
சிறப்பு ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,கிளிநொச்சி

எழுகதிர் விற்பனை நிலையம்
பல்பொருள் வாணிபம்
மொத்த சில்லறை
விற்பனை முகவர்
(சி-12542)
யாழ்சாலை, கிளிநொச்சி

சும்மா இன் சுவையகம்
காலை, மதிய, இரவு உணவு
வகைகளையும், குளிர்பான
வகைகளையும் சுகாதாரமான
முறைப்படி பெற்றுக்கொள்ளலாம்
யாழ்சாலை, கிளிநொச்சி
(சி-12602)
யாழ்சாலை, பரந்தன்

பார்த்தீபன் ஓவியக் கலையகம்
சகலவிதமான ஓவிய வேலைகளும்
கணினி மூலம் வடிவமைத்து குறித்த
தவணையில் செய்து தரப்படும்
உரிமையாளர்-பார்த்தீபன்
கனகபுரம் வீதி, (சி-12604) கிளிநொச்சி

... உணவகம்
...ரிர தேவையான குளிர்பானங்களையும்
...ளையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும்
...இன்புற நாடவேண்டிய இடம்
...ம் உணவகம்

சிவனருட்செல்வன் அரிசி ஆலை
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு- கிளிநொச்சி.
சம்மந்தன் அரிசி ஆலை
இல.93,ஸ்கந்தபுரம்- கிளிநொச்சி.
(சி-12549)

நிறைமதி நகையகம்
எங்கள் நகைகள்
பொன்னகை என்ற சிறப்போடு
உங்கள் வாழ்வின்
புன்னகைக்கும் வழிவகுக்கும்
யாழ். சாலை, (சி-12550) கிளிநொச்சி

...ம் அரிசி ஆலை
... RICE MILL
...ல்லை.
...ர்: இராமன், இலட்சுமணன்
(சி-12543)
...அரிசி ஆலை
கிளிநொச்சி

பாமகள் உணவகம்
உங்களுக்குத் தேவையான சைவ,அசைவ
உணவு வகைகளை சுகாதார முறைப்படி
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
(சி-12601)
யாழ்.சாலை கிளிநொச்சி

மின்னிலா மின்னியல்
சகலவிதமான மின்னியல், இலத்திரனியல்
பைப், வகைகளை நியாய விலையில்
பெற்றிட நாட வேண்டிய
ஒரே இடம்
இன்று தேரில் பவணி வரும் கலியுக வரதனாம்
கந்தனின் நல்லருள் நாடெங்கும் அருள்பாலிக்க
வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.
(சி-12546)
யாழ். சாலை, கிளிநொச்சி

# கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான
## வருடாந்த இரதோற்சவ சிறப்பிதழ் - 18-08-2005


செந்தூரன் களஞ்சியம்

தரமான மின்சாரப் பொருட்கள்
விற்பனையாளர்கள்

எம்.எம்.பி.கட்டடம்.

யாழ்.சாலை,
கிளிநொச்சி.



மீனாட்சி நகைமாடம்

யாழ். சாலை, கிளிநொச்சி.



அசல் 22 கரட் தங்க நகைகளை
மனதைக்கவரும் வடிவங்களில்
கைதேர்ந்த வல்லுனர்களினால்
வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய சிறந்த ஓரே இடம்.

மீனாட்சி நகை மாடம்.

(சி-12549)

உங்களது
நம்பிக்கை
நாணயமுள்ள
தங்க வைர
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்



தங்கச் சுடர்
நகைமாடம்



பொது அங்காடி அருகில்,
கிளிநொச்சி

(சி-12538)



இளவரசி
நகை மாடம்

கனகபுரம் வீதி, கிளிநொச்சி

அசல் 22 கரட்
தங்க நகைகளை
மங்கையர் மனதைக்
கவரும் வடிவங்களில்
கைதேர்ந்த
வல்லுனர்களினால்
வடிவமைத்துப்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய
ஓரே இடம்.



(சி-12536) உரிமையாளர் -ருதஸ்குமார்



கிளி. நகரில் சுவைமிகு காலை, பகல், இரவு உணவுகள்
குளிர்பான வகைகள், தேநீர், சிற்றுண்டிகளுக்கு
சிறந்ததோர் உணவகம்,
குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன்...

கிளியரசன் சுவையகம்

A.9, வீதி, கிளிநொச்சி.

(சி-12539)

# சிங்களப் பேரினவாதம் தத்தெடுத்த 'தமிழன்'

**தமிழ்** மக்கள் எவருமே கண்ணீர் சிந்தாத, கவலைப்படாத 'தமிழன்' ஒருவர் இறந்துள்ளார் எனின் அது சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமராகத்தான் இருக்க முடியும். சிறிலங்கா அரசாங்கம் அவரின் உடலை அரச மரியாதையுடன் தகனம் செய்திருக்கலாம். ஆனால் இது சிங்களப் பேரினவாதத்திற்குச் கதிர்காமர் செய்த தொண்டிற்காகவே ஒழிய அவர் இலங்கைக்கு ஆற்றிய சேவைக்காக அல்ல.

சேர்.பொன் இராமநாதன் அவர்களை சிங்களவர்கள் தேரில் வைத்து இழுத்தார்கள் என்பது கடந்த கால வரலாறு. இது சிங்களவருக்குச் செய்த பேருதவிக்காக செய்யப்பட்டதே ஒழிய தமிழரின் தேசப்பற்றிற்காகவும், தேசிய உணர்விற்காகவும், செய்யப்பட்டவை அல்ல. அவ்வாறு இல்லாதுவிட்டால் பிற்காலத்தில் சேர். பொன் இராமநாதன், சேர்.பொன். அருணாசலம் போன்றவர்கள் அரசியலில் தோல்வியடைய வேண்டிய தேவையும், இறுதிக் காலத்தில் கவலைப்பட வேண்டிய தேவையும், ஏற்பட்டிருக்கமாட்டாது.

லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்தவர்கள் யார் என்பது குறித்து அரசாங்கம் கூறிக் கொள்வதை வைத்துக் கொண்டு எந்த முடிவிற்கும் வந்து விட முடியாது. அரசாங்கம் இது போன்ற சம்பவங்களில் விசாரணைக்கு முன்பாகவே குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவதென்பது மரபாகிக் கொண்டு விட்டதொன்று.

அதே போன்றே லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்பில் ஓட்டைகள் இருந்தன என்பதும்



ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு வாதம் அல்ல. இத்தகைய குற்றச்சாட்டு பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர்கள் தப்பித்துக் கொள்வதற்கான தந்திரமே ஆகும். அத்தோடு, அடிக்கடி தனக்குக் கொலை அச்சுறுத்தல் உண்டு எனக் கூறிக் கொள்ளும் கதிர்காமர் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஆலோசனைகளைப் புறம் தள்ளி நடந்தார் எனக் கூறுவதும் ஏற்பதற்கில்லை.

அவ்வாறு இல்லாது பாதுகாப்பில் ஓட்டைகள் விடப்பட்டதாக இருப்பின் அது தெரிந்து கொண்டே விடப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஒன்று கதிர்காமரைக் கொல்வதற்காக அன்றி கொல்லப்படுவதற்காக அவ் ஓட்டைகள் விடப்பட்டிருத்தல் வேண்டும் என்றே கருத இடமுண்டு.

ஆனால் கதிர்காமர் யாரால் கொல்லப்பட்டார்? எவ்வாறு கொல்லப்பட்டார்? ஏன் கொல்லப்பட்டார்? என்பவை எல்லாவற்றிற்கும், விசாரணையின் பின்னரான எதிர்காலமே பதில் கூற வேண்டும். சிலவேளை விசாரணையின் பின்னர் கூட அது வெளிப்பட முடியாது போகலாம். ஒன்று மறைக்கப்படலாம். அன்றி விசாரணையில் கண்டு பிடிக்கப்படாதும் போகலாம்.

ஆகையினால் இது குறித்த ஊகங்கள், அனுமானங்களை ஒரு புறம் வைத்து விட்டு இலங்கை அரசியலில் கதிர்காமர் வகித்த பாத்திரம் பற்றி நோக்குவது கதிர்காமருக்குக் கிடைத்த முக்கியத்துவத்தின் காரணத்தை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

கதிர்காமரின் அரசியல் பாத்திரம் என்பதே தமிழ்மக்களின் உரிமைப் போருக்கு எதிராக உருவாக்கப்பட்டதொன்றுதான். அதாவது தமிழ்மக்களுக்கு எதிரான அவர்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான தமிழர் என்ற 'லேபலுடன்' தேடித் தத்தெடுக்கப்பட்ட ஒருவரே லக்ஷ்மன் கதிர்காமர். இவர் சந்திரிகா குமாரதுங்கவினால் வெளி விவகார அமைச்சராக கொண்டு வரப்படும் வரையில் அரசியலில் ஈடுபட்டவரும் அல்ல. இலங்கை மக்களுடன் தொடர்பு பட்டவரும் அல்ல.

நாம் அறிந்த வரையில் அழகான உச்சரிப்பில் மேற்கத்தேயப் பாணியில் - ஆங்கிலத்தைப் பேசவும் வாதிடவும் கூடியவராக, மேற்கத்தேயக் கலாச்சாரத்துடன் இணைந்து வாழக்கூடிய தன்மை கொண்டவராகவும் லக்ஷ்மன் கதிர்காமர் இருந்ததன் மூலம் தனது பொய்களையும், யதார்த்தத்திற்கு முரணானவற்றையும் நம்பச் செய்யும் ஆற்றல் கொண்டவராக இருந்தார். இவர் ஈட்டிய சில வெற்றிகளுக்கு இது காரணமாகவும் இருந்திருத்தல் கூடும்.

லக்ஷ்மன் கதிர்காமர் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூறித் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் சிங்களப் பேரினவாதம் நடத்திய யுத்தத்திற்குத் தீவிரமாக ஆதரவளிப்பவராகவும், இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு என்ற நிலைப்பாட்டை நிராகரிப்பவராகவும் இருந்தார்.

அதாவது லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராகப் பதவி ஏற்ற காலத்திலிருந்து அவர் கொல்லப்படும் வரை அவர் என்றுமே யுத்தத்திற்கு எதிரானவராகவோ, அன்றி தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கு ஆதரவானவராகவோ அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆதரிப்பவராகவோ அன்றி ஒத்துழைப்பை வழங்குபவராகவோ இருந்ததில்லை. எப்பொழுதும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரானவராகவே இருந்தார். இதனை ஆதாரம் எதுவுமின்றி எழுந்தமானமாக நாம் இங்கு கூறவில்லை. கதிர்காமரின் கடந்த ஒரு தசாப்த வரலாற்றில் இதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

சனாதிபதியாகச் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பேற்று- கதிர்காமரும் வெளிவிவகார அமைச்சராக அழைத்து வரப்பட்டதன் பின்னர் சனாதிபதி சந்திரிகா தமிழர் மீது மேற்கொண்ட பாரிய யுத்தத்தினை நியாயப்படுத்தும் சர்வதேச ரீதியான பிரச்சாரகராக லக்ஷ்மன் கதிர்காமர் இருந்தார். இந்த வகையில் யாழ்.குடா நாட்டின் மீது சந்திரிகா குமாரதுங்க அரச பாரிய படையெடுப்பு ஒன்றை நடத்திய போது அதனைச் சர்வதேச ரீதியில் நியாயப்படுத்துவது அவரது முதற்பணியாக இருந்தது.

இப் படையெடுப்பால் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து நிர்க்கதியான நிலையில் - சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் அவர்கள் மீது அக்கறை காட்ட முற்பட்டபோதும் லக்ஷ்மன் கதிர்காமர் அதற்குத் தடையாக இருந்தார். யாழ். குடாநாட்டில் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையினால் இலட்சக்கணக்கான மக்கள் அகதியாக மரநிழல்களிலும், வீதி ஓரங்களிலும், பாடசாலைகளிலும், அகதி முகாம்களிலும் வாழ நேர்ந்ததைக் கதிர்காமர் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரவலமாகக் கொள்ளவில்லை. அவர்கள் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர் என ஒப்புக்கொள்ளவுமில்லை.

அகதியாக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்த சர்வதேச நிறுவனங்களுடன் அவர் தமிழர்கள் இடம்பெயர்ந்தவர்களே ஒழிய அகதிகள் அல்ல, அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படுதல் கூடாது என வாதிடுவதிலும், சர்வதேச ரீதியில் அகதிகளுக்கு கிடைக்கக்கூடிய உதவிகள், சலுகைகள் என்பனவற்றைத் தடுப்பதிலும் அக்கறை காட்டினாரே ஒழிய - தமிழ்மக்களின் அவலத்தையும் நெருக்கடிகளையும் கண்டு கொண்டதாக இல்லை.

இதனை விட கதிர்காமரின் நிலைப்பாடு தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைக்கு அவர் நியாயம் கற்பிக்க முனைந்ததாக இருந்தது. பொதுவாகவே சிறிலங்கா இராணுவம் தமிழர் மீதான இனப் படுகொலையை வழமையானதாக்கி இருந்த நிலையில் சில இனப் படுகொலைகள் தவிர்க்க முடியாத வகையில் வெளி வந்திருந்தன.

குறிப்பாக நவாலி தேவாலயத்தில் சிறிலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை, புதுக்குடியிருப்பு -மந்துவிலில் சிறிலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் 45 வரையான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் இந்த வகையில் அடங்கியிருந்தன.

இத்தகைய சில சம்பவங்கள் சர்வதேசத்தின் கவனத்தைக் கவருவதற்கு இச் சம்பவங்கள் தொடர்பாகச் சில சர்வதேச நிவாரண மற்றும் மனித நேய அமைப்புக்கள் வெளியிட்ட அபிப்பிராயங்களும் காரணமாக இருந்தன. இதனால், வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கடும் சீற்றத்திற்கு உள்ளாகினார்.

நவாலி தேவாலயத்தில் நடந்த படுகொலைகள் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்த கருத்துக்கள் காரணமாக சீற்றமடைந்த கதிர்காமர், நீண்ட காலமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் முரண்பட்ட போக்கைக் கடைப்பிடித்ததாக பின்னர் வெளி வந்த தகவல்கள் தெரிவிப்பவையாக இருந்தன.

இதே சமயம் மந்துவில் படுகொலைகள் தொடர்பாக அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்த கருத்தினால் வெகுண்டெழுந்த கதிர்காமர் 'மலேரியா நுளம்படிக்கும் வேலையை நீங்கள் கவனித்தால் போதும், சிறிலங்காவின் விவகாரங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம்' எனத் தனது சீற்றத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதாவது கதிர்காமர் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலையை நியாயப்படுத்துபவராகவே இருந்தார். பேரினவாதிகள் போன்று தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மூடி மறைத்து விடுவதற்குப் பெரும் முயற்சி செய்ததோடு தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நிவாரண உதவிகள் போன்றவற்றிற்கும் முட்டுக்கட்டை போடுபவராகவே இருந்தார். இந்நிலையில் கதிர்காமர் சிறுபான்மையின் உரிமையில் அக்கறை கொண்டிருந்தார் சிறுபான்மையினரின் உரிமைகள் கிட்ட வேண்டும் என விருப்பம் கொண்டிருந்தார் எனக் கூறுவதெல்லாம் பெரும் மோசடித்தனமானதாகும்.

அது மட்டுமல்ல, கதிர்காமர் சிங்கள இனவெறியர்கள் போன்று யுத்தத்தின் ஆர்வலராகவே இருந்தார். தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம்இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படும் வரை அவர் யுத்தத்தை நிறுத்த விரும்பவில்லை. சனாதிபதி சந்திரிகாவும், சிறிலங்கா ஆயுதப்படையும், யுத்தத்தை நடத்த முடியாது சமாதானப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்ற உணர்வைக் கொண்டிருந்ததோடு அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோதும் கதிர்காமர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவாக இல்லை.

எடுத்துக் காட்டாக சனாதிபதி சந்திரிகாவின் அழைப்பில் 2001 இன் ஆரம்பத்தில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல்கெய்ம் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த சமயத்தில் கூடக் கதிர்காமர் யுத்தத்தையே விரும்பினார். "விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை" என்றார். யுத்தத்தில் பெரும் ஆர்வலரும், சந்திரிகா அரசில் தமிழருக்கு எதிரான யுத்தத்தை முன் நின்று நடத்திய வருமான அன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கூட யுத்தம் பற்றிப் பேச முடியாத நிலையில் இருந்தபோது கதிர்காமர் ஆயுதத்தை கைவிடுதல், கீழே வைத்தல் போன்றவற்றைப் பற்றியே பேசினார். விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்திய யுத்த நிறுத்தத்தைக் கூட அவர் நிராகரித்திருந்தார்.



லக்ஷ்மன் கதிர்காமரின் இத்தகைய நிலைப்பாடு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னர் கூட மாறவில்லை என்பதே உண்மையாகும். இதனை சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட நோர்வே தரப்புடன் அவர் வெளிப்படுத்தி வந்த பகைமையுணர்வைக் கொண்டே புரிந்து கொள்ள முடியும்.

ஆரம்பக் கட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயத்தை நோர்வேயின் விசேட தூதுவரான எரிக்சூல்கெய்மும், சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேக்குமே முன்னெடுத்தனர். ஆனால் கதிர்காமர் போன்றவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக ஒரு கட்டத்தில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் இப்பணியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டியதாகியது. ஏனெனில் கதிர்காமர் நோர்வேயின் பிரதமருக்கு எரிக்சூல்கெய்ம் மாற்றப்பட வேண்டி எழுதிய கடிதம் காரணமாகும்.

இதன் பின்னர் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலகட்டத்திலேயே நோர்வே சமாதான முயற்சிகளில் தீவிர ஈடுபாடு காட்டத் தொடங்கியது. ஆயினும் நோர்வேத்தரப்பு விடுதலைப்புலிகள் பக்கம் சார்ந்ததாகவும், யுத்த நிறுத்த உடன்பாடு விடுதலைப்புலிகளுக்குச் சார்பானதாகவுள்ளது எனவும் குற்றம் சாட்டியே வந்தார்.

மீண்டும் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் வெளி விவகார அமைச்சராகப் பதவியேற்ற லக்ஷ்மன் கதிர்காமர் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள பேரினவாத சக்திகளின் கூச்சலுக்கு ஆதரவானவராகச் செயற்பட்டார். இப் பேரினவாத சக்திகள் நோர்வேக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக கதிர்காமர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொண்டவராக இல்லை. மாறாக நோர்வேயின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் முயற்சியில் அக்கறை காட்டினார். ஒரு கட்டத்தில் பேரினவாதிகளுடன் இணைந்து பச்சை மீன் தின்னிகள் என நோர்வேத் தரப்பைச் சாடினார்.

அது மட்டுமன்றி நோர்வேயை வெளியேற்றி இனப்பிரச்சினை விவகாரம் உள்ளிட்ட விவகாரத்தில் இந்தியாவைத் தலையிட வைப்பதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். இதன் ஒரு அங்கமாக இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதில் கதிர்காமர் தீவிர முயற்சி மேற்கொண்டார்.

சுருக்கமாகக் கூறப்போனால் பௌத்த-சிங்களப் பேரினவாத சக்திகள் போன்று முழு அளவில் செயற்பட்டார். அரசியல் நெருக்கடி நிர்ப்பந்தங்கள் காரணமாக பிரதான சிங்களக் கட்சிகள் யுத்த நிறுத்தம், சமாதானப்பேச்சுவார்த்தைகள் குறித்துப்பேச முற்பட்ட போதும் கதிர்காமர் அதில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக தமிழ்மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினார்.

கதிர்காமர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கும், பொதுக்கட்டமைப்புக்கும் எதிராகவும் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதற்கு மட்டுமல்ல, தமிழ்மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கூடக் கிடைக்கப் பெறுதல் கூடாது என்பதிலும் உறுதியாகச் செயற்பட்டார் என்பதையே வெளிப்படுத்துவதாய் இருந்தது.

குறிப்பாக, மேற்குலக நாடுகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஆதரித்த போதும் கதிர்காமர் இடமளிக்கவில்லை. இவ் அதிகார சபை விடுதலைப்புலிகளைப் பலப்படுத்துவதாகி விடும் என்ற நிலைப்பாட்டுடன் இதனை எதிர்ப்பவராகவே இருந்தார். இதேவேளை, சுனாமி அனர்த்த பேரழிவுகளுக்காக தமிழர் தாயகத்திற்கு கிட்டக்கூடிய நிவாரணங்களுக்கும் அவரின் செயற்பாடுகள் முட்டுக்கட்டை போடுவதாகவே அமைந்தது.

குறிப்பாக, ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனான் உட்பட சுனாமி பேரழிவுகளைப் பார்வையிட விரும்பிய பல உலகத் தலைவர்களை, அரச பிரதிநிதிகளை கதிர்காமர் தடுத்து நிறுத்தினார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அவர்கள் செல்வது புலிகளை அங்கீகரிப்பதாகிவிடும் என அவர் வாதிட்டார்.

கதிர்காமரின் நடவடிக்கைகள் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளை முழு அளவில் திருப்திப்படுத்தின என்பதற்கு ஜே.வி.பி பிரதமர் பதவிக்கு கதிர்காமரின் பெயரை சிபார்சு செய்யும் அளவிற்கு இருந்தது என்பதில் இருந்தே புரிந்து கொள்ளப்படுதல் முடியும்.

அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு புலிகளுக்குச் சார்பானது; நோர்வே விடுதலைப் புலிகளுக்குச் சார்பான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது; நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் என்ற நிலையில் இருந்து வெளியேற்றபட வேண்டும்; இந்தியா சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்; சுனாமி அனர்த்த உதவி நிதி முகாமைத்துவத்திற்கான பொதுக் கட்டமைப்புக் கைவிடப்பட வேண்டும்; போன்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜே.வி.பி கதிர்காமரை பிரதமராக்கவும் தயாராக இருந்துள்ளதெனில் கதிர்காமர் தமிழ் மக்களுக்கு எதிராக எதையும் செய்யத் தக்கவர் என்பதை ஏற்கனவே வெளிப்படுத்தியிருப்பதன் வெளிப்பாடே ஆகும்.

அவ்வாறு இல்லாதுவிடில் இன்று தீவிர இனவாதக் கட்சி எனப் பெயர் எடுத்துள்ள ஜே.வி.பி க்கு பிரதமராக்குவதற்கு பௌத்த - சிங்கள பேரினவாதி ஒருவர் கிடைக்காமலா போய் இருக்க முடியும்? இத்தகையதொரு பாத்திரத்தை கதிர்காமர் வகிக்காதுவிடில் சிங்கள பேரினவாதிகளின் ஏகோபித்த ஆதரவுடன், அரச மரியாதையுடன் கதிர்காமருக்கு இறுதிச் சடங்குகள் இடம்பெற்றுத்தான் இருக்குமா?

**ஜெயராஜ்**

## கட்டடங்களுக்கான அனுமதி

கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குள் (கரைச்சி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உட்பட) புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், கிணறுகள், மதில்கள், குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கும் பாரிய குழிகள் தோண்டுவதற்கும் கரைச்சிப் பிரதேசசபையின் அனுமதியை தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி பெறாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன்.நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12558)

## பட்டதாரிகளை ஆட்சேர்த்தல்-கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தரமாகக்கொண்ட அல்லது ஏனைய மாவட்டத்தில் வசிக்கும் குறைந்தது 5 வருடங்கள் தொடர்ச்சியாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்ற விருப்பமுடைய பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்கள் ஏற்கனவே பட்டதாரிப் பயிலுநர் நிகழ்ச்சித்திட்டத்தில் இணைக்கப்படாதவர்களாக இருத்தல் வேண்டும். கோரப்படும் பதவிகளுக்கு உரிய தகைமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| பதவி | தகைமை |
|---|---|
| 01.வரவு செலவுத்திட்ட உதவியாளர் | முகாமைத்துவம்/வர்த்தகம் சார்ந்த பட்டம் |
| 02.கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் | சகல பட்டதாரிகளும் |
| 03.சமுர்த்தி முகாமையாளர் | சகல பட்டதாரிகளும் |
| 04.அபிவிருத்தி இணைப்பாளர் | சகல பட்டதாரிகளும் |
| 05.திட்டமிடல் உதவியாளர் | சகல பட்டதாரிகளும் |

மேற்படி தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை, அரசாங்க அதிபர் கிளிநொச்சி மாவட்டம் என்ற முகவரிக்கு 2005.08.30 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12562)

## தேடுகின்றோம்

## மகன் இராகுலனிற்கு

தம்பி நீ வீட்டை விட்டுப் போனபின் எல்லோரும் உடைந்து போய்விட்டோம். அப்பா நடுக்கடலில் இருந்து போன் எடுத்து அழுகிறார். நீயில்லாமல் அம்மா செத்துக்கொண்டிருக்கிறா. தயவு செய்து வீட்டிற்கு வரச்சொல்லி மன்றாடுகின்றோம்.

இராமச்சந்திரன்
இராஜேஸ்வரி.
அம்மா. அப்பா.அக்காமார்.
றோனா,

47, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

(6652)

உ

சிவமயம

## நாவாலி அருள்மிகு அந்திரான் முருக மூர்த்தி கோவில் தேர்த்திருவிழா



புதிய சித்திரத்தேரில் தேரேறிவரும் அந்திரான் முருகா எமது நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு மக்கள் உன்அருளைப்பாடிப் பரவவேண்டுகின்றோம்.

ஓம் சரவணபவ

வேலழகன்,
பல்பொருள்வாணிபம்,
பள்ளிக்குடா,
பூநகரி.

(6546)

## அறிவித்தல்

## மணல் அனுமதி

கரைச்சிப் பிரதேசசபைப்பிரிவிற்குள் உடனடியாகச் செயற்படும் விதத்தில் மணல், கற்கள்,கிறவல் ஆகியவற்றினை அகழ்வதற்கும், கொண்டு செல்வதற்கும் பிரதேச சபையின் அனுமதி தவறாது பெற்றுக் கொள்ள வேண்டும். அனுமதியெதுவும் பெறாதவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அளவுக்கதிகமாக மணல், கற்கள்,கிறவல்களை அகழ்வது இயற்கை வளத்தினைப் பாதிக்கின்றது.

பொன். நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12557)

## மூன்று ஆட்சேபனை மனுக்கள்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மீள் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தாக்கல் செய்த ஆட்சேபனை மனுவுக்கு எதிராக மூன்று எதிர் ஆட்சேபனை மனுக்களை ஜே.வி.பி.யின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களாலும், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்த ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## அத்தியாவசியப் பொருட்களாக பாண், சீமெந்து பிரகடனம்

(கொழும்பு)

பாணும், சீமெந்தும் அத்தியாவசியப் பொருளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பாணுக்கும், சீமெந்துக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கப்போவதாக சிறிலங்கா வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

## தமிழீழ தேசியத்தொலைக்காட்சியின்

த தே தொ NTT

## திருத்தப்பட்ட தொழிநுட்பத் தகவல்

**Satellite: Eurosat Ku 45°E**
**Azimuth :258°**
**Frequency: 11506 Mhz**
**Symbol rate :2.894 MS/s**
**Polarity :Vertical**
**FEC: 3/4**

மின்னஞ்சல்: info@tamilntt.com T.P. No. 0212285816

(சி.12555)



# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்-18-08-2005



## எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதி முருகன்



தொண்டைமானாற்றங்கரையில் அமைந்துள்ள செல்வச் சந்நிதி ஆலயம் மிகப் பெரும் வரலாற்றுச் சிறப்பை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இவ் ஆலயத்தில் வேல் வழிபாடு முக்கியத்துவம் பெற் றுள்ள துடன் இங்கு பிராமணரல்லாத ஜீவனோபாயத் தொழில் புரிபவர்களே பூசகர்களாக இருக்கின்ற மையும் குறிப்பிடத்தக்கது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமாக பூவரசமரம் அமைந் துள்ளது. இன்று இவ் ஆலயம் அமைந் துள்ள இடத்தில் இருந்த ஒரு பூவரசமர நிழலிலேயே வீரபாகு தேவர் வேல் ஒன்றை வைத்துச் சந்திக்காலப் பூசை செய்தார். ஐராவசு என்ற முனி வரும் பூவரசமர நிழலிலேயே தவம் செய்து சமாதியானார். இதனால் பூவர சமரமே செல்வச் சந்நிதியின் தல விருட்சமாக இருந்து வருகிறது.

அன்னதானக் கந்தன் என அன்பாக அழைக்கப்படும் முருகப் பெருமானுக்கு ஆவணி மாதத்தில் வரும் பூரணையில் தீர்த்தம் நடைபெறும். அதற்கு முன்வரும் அமாவாசை அற்றுப்போகும் தினத்தில் கோவில் கிணற்றுக்கு அருகேவள்ளிக்கொடி முளைப்பதோடு கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகிறது.

செல்வச்சந்நிதி முருகப் பெருமான் மூலஸ்தானத்தில் வேல் உருவிலேயே எழுந்தருளி இருக்கிறார். திருவிழாக்களின் போதும் வேலவன் வேல் உருவிலேயே வீதி வலம் வருகிறார். இவ்வேலில் சிகண்டி முனிவர் தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றிலையை கிள்ளி வீசியபோது அது வேலாக மாறி யானையைத் தாக்கியதை எடுத்துக்காட்டும் முகமாக வெற்றிலையின் நுனி பதிக்கப் பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

செல்வச்சந்நிதி ஆலயம் கல்லோடை என்ற பகுதியில் அமைந்திருப்பதனால் 'கல்லோடைக் கந்தன்' எனவும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதால் 'காவடிக் கந்தன்' எனவும், ஆற்றங்கரையில் எழுந்தருளி அருள்பாலிப்பதால் 'ஆற்றங்கரையோன்' எனவும், வீரபாகு தேவர் சந்திக்காலப் பூசை செய்ததினால் 'சந்நிதியான்' எனவும், பக்தர்களால் பல பெயர் கொண்டு சந்நிதி முருகன் அழைக்கப்படுகிறான்.

இவ் வருடமும் வழமைபோல் வருடாந்த மகோற்சவம் 05-08-2005 அன்று ஆரம்பமாகி இன்று 18-08-2005 வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், நாளை வெள்ளிக் கிழமை தீர்த்தத் திருவிழாவும், நடைபெறவுள்ளது. செல்வச் சந்நிதி முருகன் அருளால்- தமிழ் பேசும் மக்களின் இன்னல்கள் தீர்த்து சகல சுபீட்சத்துடனும், சகல உரிமையும் பெற்று சமாதானமாக வாழ, தெய்வீக அருளை வளர்க்க சந்நிதி முருகன் அருள் பாலிப்பாராக.

சிறப்பிதழாக்கம்
காரையு,ரான்



கடந்த வருடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரில் சந்நிதி முருகன் பவனி வரும் காட்சி


ஆறாத துயரம் தீர்க்கும் சந்நிதிக்கந்தனருள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்

புதிய அம்பிகா மல்ரி சென்ரர்
பிரதான சாலை, நெல்லியடி, கரவெட்டி.
T.P -021-226 3139 Fax-021-226 3571
(சி-12450) E-mail:-loshan@sltnet.lk

மகாலக்சுமி தங்கமாளிகை
தங்கப்பவுண் நகைவியாபாரம்
பிரதானசாலை, நெல்லியடி.
(சி-12707)

கலைவாணி
கண்ணாடிக்களஞ்சியம்
பிரதானசாலை, நெல்லியடி.
(சி-12708)

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்
வலி–கிழக்கு வடபகுதி
பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்
(சி-12701) அச்சுவேலி. தொ.பே–021–222 5988

யோகாஸ் கிறீம் ஹவுஸ்
கந்தமுருகேசனார் சிலையடி,
மந்திகை, பருத்தித்துறை.
(சி-12706)

ஜமுனா ஸ்ரோர்ஸ்
தம்ரோ தளபாட நிலையம்
பிரதானசாலை, நெல்லியடி.
தொ.பே-021-226 3970
(சி-12709)

ஹப்பி ரெக்ஸ்ரைல்
ஹப்பி தொலைத்தொடர்புசேவை
தொ.பே-021-226 3287
இல:110, பிரதானசாலை, நெல்லியடி
(சி-12702)

அம்பிகை நகைமாடம்
நெல்லியடிச்சந்தி, நெல்லியடி.
(சி-12705)

செல்லமுத்து
புடைவை மாளிகை
பிரதானசாலை, நெல்லியடி.
தொ.பே-021-226 3238
(சி-12710)

நவீன வடிவமைப்புக்களில்
அழகிய தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்
வைஷ்ணவி நகைப்பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம்
-Vysnavi-Nagai-Poonka-
ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
22 கரட்டில்
செய்துகொடுக்கப்படும்.
பிரதான வீதி, நெல்லியடி.
(சி-12703)

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்
கட்டைவேலி–நெல்லியடி
பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்
நாம் வழங்கும் சேவைகள்
- நுகர்ச்சிச்சேவை
- கிராமியவங்கிச்சேவை
- கட்டடப்பகுதிச்சேவை
- ஒப்பந்தப்பகுதிச்சேவை
- வெதுப்பகம்
- நூல்நிலையம்
- கலாச்சார பெருமன்றம்
- புலமைப்பரிசில் வழங்கல்
- பாலர் பாடசாலை
தொ.பே-021-226 3263
மேலும் பல சேவைகளின் ஊடாக எமது மக்கள் பயன்பெறும் வகையில் நாம்செயற்படக்காத்திருக்கின்றோம்.
(சி-12704)

# இரண்டாவது போட்டியிலும் சிம்பாப்வேக்கு தோல்வி
# தொடரை முழுமையாகக் கைப்பற்றியது நியூசிலாந்து



சிம்பாப்வேக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும்,சிம்பாப்வே அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஒரு இனிங்ஸ் 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

கடந்த 15 ஆம்திகதி புலவாயோவில் ஆரம்பமான மேற்படி டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 207 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ரெயிலர் 77, தைபு 25, ஓட்டங்களையும், மக்வியர் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஷேன்பொன்ட் நான்கு விக்கெட்டுக்களையும் விக்டோரி மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். சிம்பாவே முதல் இனிங்சில் 231 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.



துடுப்பாட்டத்தில் தைபு76, மக்வியர் 42 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் ஷேன்பொன்ட் ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

நியூசிலாந்து முதல் இனிஸ்சில் 484 ஓட்டங்களைப் பெற்றது.துடுப்பாட்டத்தில் முறையே அஸ்ரல் 128, வின்செனட் 92, பிளெமிங் 65 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். கீத்ஸ்ரிக் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மேற்படி வெற்றி மூலம் இரண்டுபோட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை நியூசிலாந்து 2-0 என்ற நிலையில் முழுமையாக கைப்பற்றியது.

## மெக்ராத் சாதனை



மான்செஸ்டர் டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் கிளென்மெக்ராத் ஐந்து ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் அதிக ஓட்டம் எடுத்த கடைசி விக்கெட் வீரர் என்ற புதிய சாதனை படைத்துள்ளார் மெக்ராத். இவர் 11ஆவது வீரராக களமிறங்கி இதுவரை 555 ஓட்டங்கள் எடுத்துள்ளார். முன்னதாக மேற்கிந்தியத்தீவின்கொட்னி வோல்ஷ் 553 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.




# எஞ்சிய போட்டியிலும் ஆதிக்கம் தொடரும்


-வோகன்

ஆஷஸ் தொடரில் எங்களின் ஆதிக்கம் தொடரும் அடுத்த டெஸ்டில் அவுஸ்திரேலியாவை வீழ்த்துவோம் எனச் சபதமிடுகிறார் இங்கிலாந்து தலைவர் மைக்கேல் வோகன்.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் பின் இங்கிலாந்து அணியின் ஆதிக்கமே காணப்படுகிறது. இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து இரண்டு ஓட்டங்களில் வெற்றி பெற்றது. மான்செஸ்டரில் நடந்த மூன்றாவது டெஸ்டை அவுஸ்திரேலியா தட்டுத்தடுமாறி சமன் செய்தது.

423 ஓட்ட இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்தின் அனல் பறக்கும் பந்து வீச்சில் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறியது.. ரிக்கிபொண்டிங் 156 ஓட்டங்கள்எடுத்து அணியைத் தோல்வியில் இருந்து மீட்டார்.

கடைசி நேரத்தில் வோன், பிரட்லீ, மெக்ராத் ஆகியோர் கைகொடுக்க ஒரே ஒரு விக்கெட் எஞ்சியிருந்த நிலையில் ஆட்டத்தை சமன் செய்தனர்.

இது குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கேல் வோகன் கூறுகையில்; மான்செஸ்டரில் கடைசி ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தால் தொடரில் 2-1 என்ற முன்னிலை பெற்றிருக்கலாம். ஆனால் இப்போட்டி சமனானதால் நாங்கள் ஏமாற்றமடைந்து விடவில்லை. கடந்த இரண்டு டெஸ்டிலும் எங்கள் வீரர்களே முழுமையாக ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். இதைப்பார்த்துப் பெருமைப்படுகிறேன். எங்களின் இந்த ஆதிக்கம் தொடர் முழுவதும் நீடிக்கும். அடுத்த டெஸ்டில் கட்டாயம் அவுஸ்திரேலியாவை வீழ்த்துவோம் என்றார்.

கடந்த எட்டு ஆண்டுகளாக ஆஷஸ் கோப்பையை அவுஸ்திரேலிய அணி தக்க வைத்து வருகிறது. ஆனால் இம்முறை இவர்களின் பிடி கொஞ்சம் கொஞ்சமாக நழுவுகிறது. இதனால் எட்டு ஆண்டுகளுக்குப் பின் சொந்த மண்ணில் இளம் இங்கிலாந்து அணி கோப்பையை வெல்லும் வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது என்றார். நான்காவது டெஸ்ட் வரும் 25 இல் டிரண்ட்பிரிட்ஜ் நகரில் தொடங்குகின்றது.

# இங்கிலாந்து முன்னணி வீரர்களுக்கு ஓய்வு
# கவுண்டி அணிகள் கிரிக்கெட் சபையுடன் முறுகல்

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள லங்காஷயர் யோர்சயர் அணிகளுக்கிடையிலான கவுண்டி கிரிக்கெட் போட்டியில் அவ்வணிகள் சார்பில் விளையாடும் அன்ருபிளின்டொப் மற்றும் மைக்கல் வோன் மத்தியு கோக்காட் ஆகியோர் பங்கேற்க முடியாமையால் அவை இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.



லங்காஷயர் தலைவர் குறிப்பிடும் போது, வீரர்ஒருவர் காயப்பட்டால் அன்றி செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி கவுண்டி போட்டிகளில் கலந்துகொள்ளவேண்டும் என்றும், இதனாலேயே தான் கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டிருப்பதாக கூறுகிறார். ஆயினும் வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும் ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டிக்கு முன்பு வீரர்களுக்கு ஓய்வளிக்க வேண்டும் என கிரிக்கெட்சபை கூறியுள்ளதுடன்காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் பிளிண்டொப் பிரான்ஸ் சென்று சிகிச்சைபெற வேண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. அதற்கு அவர் அங்கு என்ன சிகிச்சை பெறுவாரென லங்காஷயர்தலைவர் கேட்டதற்கு வைத்தியர்கள் சனிக்கிழமை அவர் விளையாடக்கூடாது எனத் தெரிவித்திருப்பதாகவும் ஆஷஸ் தொடருக்காக அவர் பூரண ஓய்வில் இருக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

மேலும் நடைபெறும் கவுண்டிபோட்டிகளில் பீற்றர்சன், ஆஸ்லி ஹைஸ்ஸ்,இயன்பெல் ஆகியோரும் பங்குபற்ற இருப்பினும் அவர்கள் பங்குபற்றுவது சந்தேகமாயிருப்பதாகவும் இது தொடர்பாக உத்தியோக பூர்வ அறிவித்தல் கிடைக்கவில்லையென்றும் லங்காஷயர் தலைவர் சிமன்ஸ் கூறியுள்ளார்.

# பந்துவீச்சில் பிளிண்டொப் முன்னேற்றம்

ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் தனது திறமையை வெளிக்காட்டியதிலிருந்து இங்கிலாந்தின் சகல துறைவீரர் பிளிண்டொப் பந்து வீச்சில் பத்தாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவர் தனது அணியின் ஹார்மிசன், கோக்காட் இருவரையும் முந்திவிட்டு தரவரிசையில் முன்னேறிவிட்டார். அடுத்து சைமன்ஸ் ஜோன்சும் இத்தொடரில் 13 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன்மூலம் முன்னேற்றம் கண்டுள்ளார்.



சியோலில் நடந்த பெண்களுக்கான கண்காட்சி கால்பந்து போட்டியில், தென்கொரிய வீராங்கனைகளிடம் இருந்து பந்தை தட்டிச் செல்ல முனைகிறார் வடகொரிய வீராங்கனை பக்கியோங் சன்(நடுவில்). இதில் வடகொரியா 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

# பரபரப்பான முதலாவது போட்டியில் ஆபிரிக்க 11பேர் அணிக்கு 2 ஓட்ட வெற்றி

ஆபிரிக்க 11 பேர் அணிக்கும் ஆசிய 11 பேர் அணிக்குமிடையில் நேற்று நடைபெற்ற பரபரப்பான முதலாவது ஒரு நாள் சர்வதேசப்போட்டியில் ஆபிரிக்க 11 பேர் அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றிபெற்றது.தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் பார்க் விளையாட்டு



மைதானத்தில் பகல் இரவாக நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் ஆடிய ஆபிரிக்க 11 பேர் அணி 43.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிறின்ஸ் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களையும், பௌச்சர் 42 ஓட்டங்களையும், டிப்பன்னர் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சஹீர்கான் மூன்று விக்கெட்டுக்களையும், அக்தர் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

199 "ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய ஆசிய 11 பேர் அணி 48.1 ஓவரில் 196 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. ரசாக்38, சங்கக்கார 35, ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பொலக்,கலிஸ் தலா மூன்று விக்கெட் டுக்களை வீழ்த்தினர்.



இரண்டாவது போட்டி நாளை மறுதினம் நடபெறவுள்ளது.

## மெய்வல்லுனர் போட்டி வரலாற்றில் தன்சானியா புதிய சாதனை

22 வருடம் பழமைவாய்ந்த உலக மெய் வல்லுனர் போட்டி வரலாற்றில் தன்சானியா முதன்முதல் வெள்ளிப்பதக்கம் ஒன்றை பெற்றுசாதனை படைத்துள்ளது.

ஹெல்சிங்கில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் அந்நாட்டு வீரரான கிறிஸ் தோபர் இசக்வே என்பவரே அந்நாட்டுக்கு இந்தப் பெருமையை பெற்றுத்தந்துள்ளார். இவர் ஒரு போதும் மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்துகொள்ளாத நிலையில் பீஜிங்கில் நடைபெற்ற மரதன் போட்டியில் முதன் முதல் வெற்றிபெற்று இரண்டாமிடத்தைப் பிடித்தார். அதன் உந்துசக்தியே தனக்கு மேலும் உற்சாகமளித்து இந்தப் பதக்கத்தைப் பெற்றுத்தந்ததாக இசக்வே தெரிவித்துள்ளார்.

## ஹோலிபீல்டுக்கு தடை



முன்னாள் அதிபரா சம்பியனான இவான்டர் ஹோலிபீல்டின் குத்துச்சண்டை அனுமதிப்பத்திரத்தை நியூயோர்க் தடகள சங்கம் இரத்துச் செய்துள்ளது. சமீப காலமாக இவரது மோசமான செயற்பாடுகளில் ஏற்பட்ட அதிருப்தியே இதற்குகாரணம் என கூறப்படுகிறது.

## சிந்தனைக்கு



வீர சுதந்திரம் வேண்டி
நிற்கும் மக்களுக்கு உறுதிதான்
வலுமிக்க ஆயுதம்

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18.08.2005
தொலைபேசி 060-2213244 மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham23 ela@yahoo.com


## சீர் செய்ய முடியாதளவில்.....!

சிறிலங்கா அரசுடனான யுத்தநிறுத்தச் சூழல் எம்மைப்பொறுத்த வரையில் மிகவும் மோசமான நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. சீர் செய்ய முடியாத அளவிற்குச் செல்கின்றதோ எனச் சிந்திக்கவைக்கும் சம்பவங்கள் நடந்து வருகின்றன என்ற அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் கூற்றுக்கள் யதார்த்தத்தைப் பிரதிபலிப்வையாகவே உள்ளன.

ஒருபுறத்தில் துப்பாக்கிச் சூடு, கைக்குண்டு வீச்சு என வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாய் உள்ளது. இதில் தமிழ் மக்கள் தரப்பிலும், சிறிலங்காப்படைத்தரப்பிலுமாக கொல்லப்படும் நிலை காணப்படுகின்றது. ஆனால் இவற்றைக்கட்டுப் படுத்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதாக இல்லை.

இதே சமயம் அரசாங்கம் இவ் வன்முறைகளுக்கு வாய்ப்பளிக்கும், ஊக்கமளிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதுமட்டுமன்றி சமாதானச் சூழ்நிலைகளைக் குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில் அறிக்கை வெளியிட்டும் கருத்துக்களைத் தெரிவித்தும் வருகின்றது.

எடுத்துக்காட்டாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக அரச தரப்பின் அறிவிப்புக்கள் பொறுப்பற்ற தரம் கொண்டதாகவுள்ளது. குறிப்பாகச் சுட்டிக்காட்டு வதாயின் ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையிலும். லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் விடுதலைப்புலிகளைச் சம்பந்தப்படுத்துவதைச் சுட்டிக்காட்ட முடியும்.

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்ட பகுதியில் தேடுதல் நடத்திய சிறிலங்காப் புலனாய்வுத்துறையினர் இரண்டு சயனைட் வில்லைகளைக் கண்டுெடுத்ததாகத் தெரிவித்தபோதே விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்ட அரசாங்கம் தயாராகி விட்டது என்பது உணரப்பட்டதொன்றாகவே இருந்தது.

ஆனால் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் விடுதலைப்புலிகளாக இருப்பின் அவர்கள் ஒரு போதும் சயனைட்வில்லைகளை எறிந்து விட்டு தப்பிச்சென்றிருக்கமாட்டார்கள். ஏனெனில் விடுதலைப்புலிகள் சயனைட் வில்லைகளை வைத்திருப்பது நெருக்கடியின்போது பயன்படுத்தவதற்கே ஒழிய நெருக்கடியின்போது எறிந்து விட்டுச் செல்வதற்கு அல்ல.

ஆகையினால் போலித்தனமான குற்றச்சாட்டுக்களை விடுதலைப்புலிகள் மீது சுமத்துவதன் மூலம் பதற்ற நிலையையும், நெருக்கடி நிலையையும் தோற்றுவிக்க அரசாங்கம் முயல்வதாகவே கொள்ள முடியும். வேறொரு விதத்தில் பார்த்தால் சிறிலங்காப் படைத்தரப்பு விவகாரத்தை திசைதிருப்பி விடுவதற்கு மேற்கொண்ட முயற்சியாகவும் கொள்ளத்தக்கது.

ஏனெனில் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டமையானது பாதுகாப்பு ஏற்பாட்டில் இருந்த பலவீனத்தின் காரணத்தினாலோ அன்றி கதிர்காமரின் ஆலோசனையைப் புறந்தள்ளிய நடவடிக்கைகளின் காரணமாகவோ அல்ல. சிறிலங்கா அரசினதும் ஆயுதப்படையினரின் பொறுப்பற்ற செயற்பாடுகளினதும் காரணமாகவே ஆகும்.

இந்நிலையில் கொலைக் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மீது சுமத்துவது கவனத்தை திசைதிருப்பி விடுவதற்கும் நாட்டில் பதற்றத்தை அதிகரிக்கும் போக்கிலான செயற்பாடாகவுமே இருக்க முடியும். இதனை உறுதிசெய்வது போன்றதாகவே அரசாங்கம் பிறப்பித்துள்ள அவசரகாலச்சட்டமும் அதனை நீடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் உள்ளன.

ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச்சட்டத்தை சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும், பொலிசாரும் கையில் எடுத்துக்கொண்டதாகவே தெரிகின்றது. பொலிசாரின் அடாவடித்தனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளை இராணுவத்தினரும் மக்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடத் தொடங்கிவிட்டனர். குறிப்பாக இராணுவச் சோதனைச் சாவடிகளைக் கடப்பதும் வீதிகளில் நடமாடுவதும் இன்று ஆபத்து நிறைந்ததாக மாறியுள்ளது.

இத்தகையதொரு நிலையில் யுத்த நிறுத்தம் சீர் செய்யமுடியாத நிலையைநோக்கிச் செல்வதாக சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியிருப்பது தவறான மதிப்பீடல்ல. ஆனால் இந்நிலை மேலும் மோசமடைவதைத் தடுப்பது அரசின் கைகளிலேயே உள்ளது. ஆனால் சனாதிபதி சந்திரிகா மீண்டும் அவசரகாலச்சட்டத்தைப் பிறப்பிக்க முற்படுவது யுத்த நிறுத்தத்தினைப் பேணுவதற்காக இருக்கமுடியாது. மீண்டும் யுத்தம் ஒன்றை நோக்கிப் போவதாகவே இருக்கும்.




# நீதிமன்றுடன் பொலிசார் விளையாடக்கூடாது
# தமக்கு சாதகமாக சட்டத்தை மாற்ற முடியாது

### — கல்கிஸ்சை மேலதிக நீதவான் எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்றத்துடன் பொலிசார் விளையாடக்கூடாது என பொலிசாருக்கு நீதவான் எச்சரிக்கை செய்துள்ளார். விசாரணை நடைபெற்ற இடத்திலிருந்த சாட்சிகளை ஆஜர்ப்படுத்த உத்தரவிடும்போது வேறு சாட்சிகளை ஆஜர் செய்து பொலிசாருக்கு தேவையானவாறு சட்டங்களை மாற்ற முடியாது எனக் கல்கிஸ்சை மேலதிக நீதவான் பொலிசாரைக் கண்டித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி கொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர் ரேலங்கி செல்வராஜா மற்றும் அவரது கணவர் சின்னத்துரை செல்வராஜா ஆகியோரின் மரணம் தொடர்பாக கல்கிஸ்சை நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணையின்போதே கல்கிஸ்சை மேலதிக நீதவான் கிரிசாந்தி தொடங்கொட பம்பலப்பிட்டிப் பொலிசாரைக் கண்டித்தார்.

இந்த விசாரணையின்போது பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய சார்ஜண்ட் வசந்தகுமார கொலை செய்யப்பட்ட ரேலங்கியின் சகோதரியையும், செல்வராஜாவின் சகோதரரையும் சாட்சிகளாக நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதாகக் கூறினார். சம்பவம் இடம்பெற்றபோது அங்கிருந்தவர்களை சாட்சிகளாக ஆஜர்ப்படுத்தாதது ஏன் என நீதவான் அங்கு கேள்வி எழுப்பியுள்ளார். அதற்குப் பதிலளித்த பொலிஸ் சார்ஜண்ட், சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்தவர்கள் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதாகவும் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

அந்த சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தாததற்கான காரணத்தை நீதிமன்றத்திற்கு அறியத்தருவதுடன், அந்த சாட்சிகளையும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தல் விடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (32)

# தேர்தல் ஆணையாளரின் தெளிவான முடிவு
# நாட்டு மக்களுக்கு கிடைத்த பாரிய வெற்றி

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெளிவானதொரு நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளமை இந்த நாட்டு மக்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித் துள்ளார்.

சனாதிபதித்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். அதற்கமைய 1999 ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி சனாதிபதி சந்திரிகா பதவிப் பிரமாணம் செய்துகொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாங்கள் தொடர்ச்சியாகக் கூறிவந்ததும், வலியுறுத்தி வந்ததும், ஆறு வருடங்களுக்கு ஒரு தடவை மக்களுக்கு சனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதையே. நாட்டின் பிரதான கட்சி என்ற அடிப்படையில், மக்களுக்கு இருக்கும் உரிமையை வலியுறுத்தும் நோக்கத்துடனேயே நாங்கள் மக்கள் சக்திப் பேரணியையும் ஏற்பாடு செய்திருந்தோம்.

இந்த நிலையில் தேர்தல் ஆணையாளர் தெளிவானதொரு நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

எமது அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;ஆறு வருடங்களுக்கு ஒரு தடவை சனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமை இருக்கிறது என்பதே.

இதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாக தேர்தல் ஆணையாளர் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த வெற்றியானது இந்த நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட ஒரு நடவடிக்கையின் பிரதிபலனாகவே கருத முடிகிறது.

எனவே, பொதுமக்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு எதிர்காலத்தில் எவரேனும் முயற்சிப்பார்களாயின் அதற்கு எதிராக பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவுள்ளது. சனாதிபதித்தேர்தலைப் பிற்போடு வதற்கு அரசாங்கம் பல்வேறு தடவை கள் முயற்சித்தது.

பல்வேறு நீதித்துறை சார்பான சூழ்ச்சிகளின் மூலம், சனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பறித்துக்கொள்வதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சி களையும் மேற்கொண்டது.

இத்தகைய அனைத்து முயற்சிகளையும் தோற்கடிப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது என்பதையே தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவின் நிலைப்பாடு தெளிவுபடுத்தியுள்ளது எனவும் தெரிவித்தார்.

# அமைச்சர் கதிர்காமர் மீது மூவரே தாக்குதல் நடத்தினர்

### –சிறிலங்காப் பொலிசார் தகவல்

லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை தொடர்பாக புதுப்புதுத்தகவல்கள் கிடைத்து வருவதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கிடைக்கப்பெற்றுவரும் தடயங்கள், தகவல்கள் ஆகியவற்றின் உதவியுடன் தாம் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.எமக்குகிடைக்கப்பெற்ற தகவல்களின்படி அமைச்சர் கதிர்காமரின் மீது மூவர் தாக்குதல் நடத்தினர்.

கதிர்காமரின் வீட்டுக்கு அயல் வீட்டு மேல்மாடியிலிருந்து தாக்குதல் நடத்திவிட்டு இவர்கள் மூவரும் வாகனம் ஒன்றில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு செல்லும் வீதியூடாக தப்பித்துள்ளனர். இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம். தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் கடந்த காலங்களில் பணியாற்றிய சுமார் 12 பணியாளர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது. கடைசியாக அந்த வீட்டில் சிங்கள இளைஞன் ஒருவரே பணியாற்றியுள்ளார். அவரிடமிருந்து பெற்ற பல முக்கியமான தகவல்களின்படி மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்களப்புக்கு விசேட குழு ஒன்று சென்றுள்ளது. படுகொலை தொடர்பாக இதுவரை சுமார் 45 பேர் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வீட்டு உரிமையாளர் தளையசிங்கத்தின் வங்கிக்கணக்குகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தாக்குதல் நடத்துவதற்கு இடம் கொடுத்ததன் மூலம் கொலையாளிகளிடமிருந்து பெருந்தொகைப்பணம் ஏதாவது பெற்றுக்கொண்டாரா என்பது குறித்து அறிவதிலும் பொலிசார் தீவிரமாகியுள்ளனர் என அவர் கூறினர்.

# சேதுசமுத்திரத் திட்டத்தின் பின்னணியில் இந்தியாவின் இராணுவ, அரசியல் மேலாதிக்கம் மேலோங்கியுள்ளது

**- சேது சமுத்திர திட்டதிற்கெதிரான மக்கள் இயக்கம்**

சேதுசமுத்திரக் கால்வாய் தோண்டும் இந்தியாவின் திட்டத்திற்கு பின்னால் இராணுவ மற்றும் அரசியல் மேலாதிக்கமே மேலோங்கியிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சேதுசமுத்திரத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு இத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் இணை இணைப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

சேதுசமுத்திரத் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படுகின்ற பல்வேறு பாதிப்புக்கள் குறித்துப் போதுமான விளக்கம் இந்திய அரசாங்கம், அதிகாரிகள் மற்றும் மக்களிடையே காணப்படுகின்றது. எனினும், சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக இன்னும் பல தெளிவான விடயங்களை நாம் இலங்கையர்களிடம் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இத்திட்டத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் குறித்து ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான பணத்தை சிறிலங்கா அரசுக்கு வழங்க சேதுசமுத்திரத் திட்டத்திற்கெதிரான மக்கள் இயக்கம் ஆயத்தமாகவுள்ளது.

மீனவர் தொடக்கம் பொதுமக்கள் வரை இதனால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்படவுள்ளதால் இத்திட்டத்தினை பலமாக எதிர்க்கிறோம். தமிழ் நாட்டில் கூட 15 இலட்சத்துக்கும் அதிகமான மீனவர்கள் இதனை எதிர்க்கின்றனர்.

இலங்கையில், தனது இராணுவ மேலாதிக்கத்தினை நிலைநாட்ட இந்தியா விரும்புகிறது. இதற்காகவே பலவித எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் இத்திட்டத்தை இந்திய அரசு முன்னெடுத்து வருகிறது என இன்னுமொரு இணைப்பாளர் தெரிவித்தார்.

## விசேட சத்திர சிகிச்சை

அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் பொது சத்திரசிகிச்சை நிபுணரினால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் நாளையும், நாளை மறுதினமும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக கேணியா, கட்டிகள், காலில் நாளப்புடைப்பு போன்றவற்றிற்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பயன்பெற விரும்புவோர் வெளிநோயாளர் பிரிவில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (கு)

## வெளிவிவகார அமைச்சராக அநுரா பதவியேற்பார்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரும், உல்லாசப் பயணத்துறை அமைச்சருமான அநுராபண்டாரநாயக்க நாளை வெளிவிவகார அமைச்சராக பதவியேற்கவுள்ளார். இப்பதவி மூலம் நாட்டிற்கும் பௌத்த மதத்திற்கும் புகழ்தேடிக் கொடுக்கப்போவதாக அவர் கூறினார்.

## அவசரகாலச்...

அடிப்படையில் பாராளுமன்ற அமர்வு கூட்டப்படவுள்ளது.

அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் கடந்த சனிக்கிழமை கொலை செய்யப்பட்டமையை அடுத்து நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு பத்து நாட்களுக்குள் அதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படவேண்டும் என அரசியல் அமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## தவறுதலாக...

பொலிசாரும் இராணுவத்தினரும் பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களில் வந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொலிசாரின் துப்பாக்கிகள் தவறுதலாக வெடித்ததிலேயே இவ் இரு பொலிசாரும் காயங்களுக்கு உள்ளாகியதாகவும் அப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எம்.எம்.கேமகே (வயது-36), ஜெயலத் (வயது-30) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவார். காயப்படும் பொழுது இவ்விரு பொலிசாரும் சிவில் உடையில் இருந்தார்கள் என்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.

குறித்த பொலிசார் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலையைச் சூழ அதிக எண்ணிக்கையில் பொலிசாரும இராணுவத்தினரும் வைத்திய சாலை வளவினுள்ளும் வைத்தியசாலையின் வெளிப்புறத்திலும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதேவேளை புலிகளின் துப்பாக்கிச்சூட்டிலேயே பொலிசார் காயமடைந்ததாகச் சிறிலங்கா இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது. (41)

## குருமன்காட்டில்...

குழாய்க் கிணற்றடியிலேயே வைத்து இவர் சுடப்பட்டுள்ளார் இரவு 8.20 அளவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.சி. அபேயசிங்க பண்டா தெரிவித்தார். சம்பவ இடம்பெற்ற இடத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேலதிக விசாரணையினை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். சம்பவம் நடைபெற்ற இடமானது அதிக மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## விடுதலைப்...

வில்லை.

அத்துடன் பயங்கரவாதம் வேறு, தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் என்பது வேறு. அமைச்சர் கதிர்காமரின் கொலையை கண்டித்த சர்வதேச நாடுகள் கூடிய விரைவில் சமாதான பேச்சுவார்த்தையை முன்னெடுங்கள் என்றுதான் கூறியிருக்கின்றன. அத்தகைய நிலைப்பாட்டையே தமிழ் தேசிய கூட்டமைப்பும் கொண்டுள்ளது.

இந்தப் படுகொலையை யார் செய்தார்கள் என்று கண்டு பிடிப்பதற்கு முன்னரே மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகள் மீது குற்றஞ் சாட்டியிருப்பது அவரது இனவாத தன்மையையே வெளிக்காட்டியுள்ளது. இது மிக கண்டிக்கத்தக்க ஒரு செயல் என்றும் தெரிவித்தார்.

## போராளியை...

படையினரும் இவரது வீட்டைச் சுற்றிவளைத்துக்கைது செய்து கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்தை அடுத்து யாழ். பொலிஸ் நிலையத்துக்குப் பூரண இராணுவப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது இதற்காக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முதல் பொலிஸ் நிலையத்துக்கான இந்த விசேட இராணுவப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். பொலிஸ் நிலையத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் பொலிஸ்நிலையத்தை சூழ காவலரண்களை நிறுவி காவல்கடமையில் ஈடுபட்டுவருவதுடன் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு செல்லும் வீதிகளை மூடி பொது மக்கள் அங்கு முறைப்பாடு செய்யச் செல்வதற்கும் தடை விதித்துள்ளனர்.

இதேவேளை யாழ்.குடாநாட்டிலுள்ள ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் இராணுவப்பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அத்தோடு, யாழ்.நகரம் எங்கும் நேற்று முற்பகல் பெருந்தொகையான இராணுவத்தினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் இப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்.நகரிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீதான கைக்குண்டு வீச்சுச் சம்பவம் மற்றும் கலட்டிச் சந்தியில் இடம் பெற்ற சுற்றிவளைப்பு கைது நடவடிக்கைகள் என்பவற்றால் யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து யாழ்.நகரம் முழுவதிலும் பெருந்தொகையான இராணுவத்தினரும் விசேட அதிரடிப் பொலிசாரும் கொண்டு வந்து குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவர்கள் ஆங்காங்கே ரோந்து நடவடிக்கைகளையும், வீதிச் சோதனைகளையும் மேற்கொண்டனர். அத்துடன் யாழ்.நகரத்தின் சில குறுக்கு வீதிகளும் மூடப்பட்டன.

மக்கள் நெருக்கடி மிக்க பகுதிகளில் படையினரும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்ட இந்நடவடிக்கைகளால் இப்பகுதி மக்களிடையே பெரும் பீதி நிலவுகிறது.(33)

## கடத்தப்பட்ட...

எனப்படுபவர் விடுமுறையில் தனது பெற்றோருடன் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள தனது வீட்டில் தங்கியிருந்த வேளையில் சிறிலங்கா படையினராலும், பொலிசாரினாலும் கடத்தப்பட்டுள்ளார். காலை சிறிலங்கா படையினராலும், பொலிசாரினாலும் இவரது வீடு சுற்றிவளைக்கப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு இவரது குடும்பத்தவர், அயலவர் முன்னிலையில் கோபி அவரது வீட்டிலிருந்து கடத்தப்பட்டுள்ளார்.

சிறிலங்கா படையினராலும், பொலிசாரினாலும் மேற்கொள்ளப்பட்ட இக்கடத்தலை யாழ். மாவட்ட அரசியல்துறையினர் வன்மையாகக் கண்டிப்பதோடு, இது அப்பட்டமான போர்நிறுத்த உடன்படிக்கை மீறலாகவுமுள்ளது எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்கப்பட்ட தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக சிறிலங்காப் படையினரும், பொலிசாரும் இயக்க உறுப்பினர்களை உள்நோக்கத்துடன் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு ஏற்கனவே யாழ். மாவட்ட அரசியல்துறையினர் கொண்டு வந்திருந்தனர். வேண்டுமென்றே, திட்டமிட்ட வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை வலுவற்றதாக்கும். உள்நோக்குடனேயே சிறிலங்கா படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள கோபியைக் கடத்திய சம்பவம் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினராகிய கோபி உடனடியாக விடுவிக்கப்படாது விட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்படுவார்கள் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள்மீது...

தேகங்கள் எமக்குள்ளன. ஏனெனில், கதிர்காமரைப் பொறுத்த வரையில் மிகப் பாதுகாப்பு வழங்கப்பட்ட ஒருவர். ஆயுதப் படைகளினாலும் அரசினாலும் பாதுகாக்கப்பட்ட மனிதராக கதிர்காமர் இருந்துள்ளார். இவ்வளவு பாதுகாப்புகளுக்கு மத்தியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றபடியால் உள்முரண்பாடுகளே இக்கொலைக்குரிய காரணமாக இருக்கலாம் என்று நாம் கருதுகின்றோம்.

விடுதலைப் புலிகள் மீது எழுந்தமானத்தில் குற்றம் சாட்டிவிட்டு உண்மையான குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் செயலில் அரசு இறங்கியுள்ளது. ஏனெனில் சிறிலங்காவில் ஒரு ஆட்சியமைப்பு இருக்கின்றது. சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற அமைப்பு இருக்கின்றது. பாதுகாப்புக் கூட வழங்கப்பட்டது. கொலையின் பின்னணியையும் ஆதாரங்களையும் கண்டுபிடிப்பது அரச படைகளின் பொறுப்பு. கண்டுபிடித்த பின் ஊகங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவது பொருத்தமாக இருக்கும். அதை விட்டுவிட்டு கொலை நடந்தவுடன் புலிகளை குற்றம் சாட்டுவது பொருத்தமற்றது. கொலைக்கான உண்மையான காரணங்களையும் குற்றங்களையும் மூடி மறைத்துக்கொண்டு குற்றச்சாட்டுக்களை மட்டும் முன் வைக்கும் நிலையில் இக்கொலை தொடர்பாக சனாதிபதி மற்றும் படைத்தரப்பினர் மீது சந்தேகங்களை கொள்ள வேண்டியு நிலையில் நாம் உள்ளோம்.

***கேள்வி:- அப்படியான சக்திகள் என்று நீங்கள் எதை கருதுகின்றீர்கள்?***

பதில்:- இலங்கையரசின் மோசமான செயல்களைக் கண்டு வருந்துகின்றோம். அரசோ, படைகளோ வெளியிடும் ஊகங்கள் போல் நாம் வெளியிட முடியாது. உண்மை நிலைகள் கண்டறியப்பட்டு உண்மை வெளிப்படும் போதுதான் எங்களுடைய கருத்துக்களை சொல்வது பொருத்தமாக இருக்கும்.

***கேள்வி:- கதிர்காமர் அமெரிக்கா உட்பட பல நாடுகளில் புலிகளைப் பற்றி பரப்புரை செய்து தங்கள் எதிரியென இருந்த சூழலில் சாவைத் தழுவிக் கொண்டார் என்று கூற லாமா?***

பதில்:- எம்மைப் பொறுத்த வரையில் இதனைத் தவறான கருத்து என்று கருதுகிறேன். ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் இப்போது இக்கொலையினை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்துகிறது. கதிர்காமர் தமிழ் மக்களால் முற்று முழுதாக வெறுக்கப்பட்டவர் என்பது உண்மை. தமிழ் மக்கள் ஒரு கொடூரமான போருக்கு முகம் கொடுத்த போது, இனப்படுகொலைக்கு முகம் கொடுத்தபோது, கதிர்காமர் உலக நாடுகளில் பல எதிரிகளை தாம் கொல்வதாகப் பரப்புரைசெய்து தமிழ் மக்களின் கடும் வெறுப்புக்குரியவராக இருந்தார். கதிர்காமர் பல ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதுதான் தமிழ்மக்களால் வெறுக்கப்பட்ட ஒருவர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். அந்த அடிப்படையில் வைத்துக் கொண்டு புலிகள் மீதும் தமிழ்மக்கள் மீதும் குற்றம் சுமத்துவது அர்த்தமற்றது எம்மால் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமல்ல.

தமிழ்மக்கள் மீதான இனப் படுகொலையினை நியாயப்படுத்தியும் இன விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியும் உலகளாவிய ரீதியில் கதிர்காமர் மட்டுமல்ல சிங்களப் பேரினவாதிகள் ஆயிரக் கணக்கானோர் இவ்வாறு பணியாற்றி வருகின்றனர். கதிர்காமர் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் தீவிரமாகச் செயற்பட்டுள்ளார். இக் காரணங்களை வைத்துக்கொண்டு பெரியளவில் புலிகள் மீது குற்றத்தைச் சுமத்தி சர்வதேச அளவில் புலிகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில்தான் அரசு செயற்பட்டுள்ளது. இது ஒரு தவறான கருத்து. கதிர்காமரின் கொலையின் பழியை தமிழ் மக்கள் மீது சுமத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

***கேள்வி:- தமிழ்மக்களின் இலட்சியத்துக்கு துரோகம் இழைத்தவராக கதிர்காமரைப் பார்க்கின்றீர்களா?***

பதில்:- கதிர்காமர் மட்டுமல்ல சிங்களப் பேரினவாதிகள் பலர் உள்ளனர். சிங்கள அரச பயங்கரவாதத்தில் பலர் ஈடுபட்டுள்ளார்கள். அதில் கதிர்காமரும் ஒருவர் தான். அதனால்தான் தமிழ் மக்களினால் வெறுக்கப்பட்டார்.

***கேள்வி:- தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகம் ஏதாவது ஒரு வகையில் தடைசெய்யும் நிலை உருவானால் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளிலிருந்து விலகும் சூழல் உருவாகுமா?***

பதில்:- அப்படியான சூழல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. கடந்த காலங்களில் புலிகளோ, மக்களோ சர்வதேச சமூகத்துடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதோ, கருத்துக்களை பரிமாறிக் கொள்வதோ கஷ்ரமாக இருந்தது. சிறிலங்கா அரசு ஒரு தலைப்பட்சமான கருத்துக்களை மட்டும் பரப்பி வந்தது. சில நாடுகள் புலிகளை தடைசெய்யும் சூழலைக் கூட உருவாக்கினார்கள். கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் சர்வதேச சமூகத்திடம் தமிழ்மக்களின் நிலைப்பாடுகளை, மனித உரிமை மீறல்கள் அனைத்தையும் எடுத்து விளக்கியுள்ளோம். இந்நிலையில் முன்னைய நிலை உருவாகும் என்று கருதவில்லை. சர்வதேச சமூகம் அவ்வாறான நிலையை எடுக்கும் என்று கருதவில்லை. இனப்பிரச்சினை தீர்வுக்கு நல்லதொரு முடிவினை சர்வதேச சமூகம் எடுக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

பொதுக்கட்டமைப்புக் கூட முடக்கப்பட்டு சர்வதேச சமூகத்தின் முயற்சிகள் கூட முடக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சர்வதேச சமூகம் தமிழ்மக்களுடைய நலன்கள், அபிலாசைகள் எவை என்பதை விளங்கியுள்ளது. அந்த வகையில் சர்வதேச சமூகம் பிழையான முடிவுக்கு வரும் என்று நான் நினைக்கவில்லை. சர்வதேச சமூகம் பிழையான முடிவையெடுத்து தமிழர்களை பழைய நிலைக்கு தள்ளிவிடுவார்கள் என்று நினைக்கவில்லை. சர்வதேச சமூகத்திடம் நீதியை எதிர்பார்க்கின்றோம்.

***கேள்வி:- நீங்கள் இக்கொலையைச் செய்யவில்லையென்பது எம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது. கௌசல்யனின் கொலையை எடுத்துப் பார்ப்போம். தமிழினத்திற்கும் துரோகம் இழைத்த மனிதர் என்ற பின்னணியில் புலிகள் பழி தீர்க்கும் முகமாக ஏன் இக்கொலையைச் செய்திருக்க முடியாது? ஏன் செய்யக் கூடாது? தங்கள் மறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன். ஏன் செய்யக் கூடாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?***

பதில்:- புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டில் ஒப்பமிட்டுள்ளார்கள். சமாதான முயற்சிகளில் பொறுப்புணர்வுடன் செயற்படுகின்ற ஒரு தரப்பு என்ற வகையில் இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்த வேண்டிய சூழல் புலிகளுக்கு இல்லை. கௌசல்யனைப் படுகொலை செய்தது இலங்கையரசாங்கமாய் இருந்தாலும் படைத்தரப்பு திட்டமிட்டு படுகொலை செய்வதற்கான ஆதாரங்களை கண்காணிப்புக் குழுவிற்கு சுட்டிக் காட்டியிருக்கின்றோம். ஆகவே, இந்நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கையை செம்மையாகப் பேணி வருகின்றோம். மறுதரப்பு என்ற வகையில் அரசும் படைகளும் பேணாததினால் பல குற்றச் செயல்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. இந்நிலையில் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.